கன்னியாகுமரி

அன்னை மாயம்மா



டாக்டர் இ. சகுந்தலா

அ. கா. பெருமாள்

கன்னியாகுமரி

அன்னை மாயம்மா

அ. கா. பெருமாள்.

Kanyakumari
ANNAI MAYAMMA

Author :

A. K. PERUMAL
'Pushpa
K. P. road
R. V. Puram
Nagercoil.

Publisher :

S. MONEENDRAN
7. Perumal Street
R. V. Puram
Nagercoil.

First Print : 19 June1980.

Printed at Ratna Printing House, Nagercoil.

என்

அம்மாவுக்கு

பதிப்பாளரின் குறிப்பு

சித்த புருஷர்களின் வாழ்வு எந்தக் காலத்திலும் சரியாகத் தொகுக்கப்படவில்லை. தமிழ்ச் சித்தர்களின் வாழ்வு கூட முழுக்கவும் கற்பனை கலந்துதான் காணப்படுகிறது. ஏன் அண்மையில் வாழ்ந்த இராமலிங்க அடிகளைப் பற்றிக் கூட எத்தனை கற்பனைக் கதைகள் காணப்படுகின்றன. நம்மவர்களுக்கு எப்போதும் சமகால வரலாற்றை எழுதி வைக்க வேண்டுமென்ற ஆர்வமில்லாததுதான் அதற்குக் காரணம் வசதி குறைந்த அந்தக் காலத்துக்கு அந்தக் காரணம் சரி; இப்போது வேண்டாம்.

பேராசிரியர் ந. சஞ்சீவி என்னிடம் இப்போது வாழ்கின்ற தமிழ் நாட்டுச் சித்தர்களின் வாழ்வைத் தொகுத்து நூலாக வெளியிட்டால் சித்தர் பாடல்களின் ஆய்வுக்குப் பயனுடையதாக இருக்கும் என்றார்கள். அந்த முயற்சியின் முதல் படிதான் "அன்னை மாயம்மா" என்ற இச்சிறு நூல். இந்நூலைத் தொடர்ந்து. குமரி மாவட்டத்தில் வாழ்ந்த சித்தர்களின் வாழ்வையும் நூலாக வெளியிட ஆசை உண்டு இறைவன் அதற்குத் துணை நிற்பான் என்ற நம்பிக்கை உண்டு.

இந்நூலில் முரண்பாடான கருத்துக்கள் இருந்தால் எழுதுங்கள்; மறு பதிப்பில் திருத்தி வெளியிடுகிறோம்.

இவண்

கூ. மணீந்திரன்

உரிமையாளர்

ரத்ன அச்சகம், நாகர்கோவில்.

டாக்டர் ந. சஞ்சீவி
தமிழ்ப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை
24-5-'80

அன்புரை

நண்பர், பேராசிரியர் திரு. அ. கா. பெருமாள் அவர்கள் உண்மையுடனும் ஊக்கத்துடனும் உருவாக்கி யுள்ள கன்னியாகுமரி அன்னை மாயம்மா என்ற நூலைக் கையில் கிடைத்ததும் வைத்த விழி வாங்கா மல் ஒரே நொடியில் படித்து முடித்தேன். அருமை யான தமிழ்; பெருமையான தத்துவம்.

இந்த நூலைப் படித்துவிட்டு அன்னை மாயி அவர் களைப் பார்ப்பதுதான் பார்வை. அன்பர்கள் இந்நூலைத் தயங்காமல் வாங்கிப் படிப்பதால் பயன் பெறுவர்.

இந்நூலைப் பார்ப்பவர்கள் படிப்பவர்கள் மாயி தாயைப் பற்றிய உண்மைச் செய்திகளை உடனுக் குடன் இந்நூலாசிரியருக்குத் தெரிவிப்பது இன்றிய மையாதது. இது நூலாசிரியர் உணர்வில் மாயி பற்றி மேலும் விரிவான நூல் படைக்க உதவும்.

மாயி தாயி
மலரடிகள்
வாழ்க! வெல்க!

அன்பன்,
ந. சஞ்சீவி.

நன்றிக் கடன்

இச்சிறு நூலை எழுதத் துாண்டியவர் திரு. S. மணீந்திரன். அம்மாவைப் பற்றி செய்திகள் சேகரிக்க அழைத்த இடமெல்லாம் என்னோடு வந்தார் திரு. ஈஸ்வரன். அம்மாவைப் பற்றிய அனுபவங்களைச் சொன்னதோடன்றி புகைப் படங்களும் தந்து உதவியவர் திருமதி சரோஜினி. மாயிசமாஜத்தை உருவாக்கிய திரு. இராஜமாணிக்கம் மாயம்மா பற்றிய குறிப்புகள் அடங்கிய பதிவு ஏட்டைப் படிக்க உதவினர்; தன் அனுபவத்தினையும் கூறினர். அம்மாவின் அருகே இருந்து தொண்டாற்றும் திரு. இராஜேந்திரன் எத்தனையோ அரிய ரகசியமான செய்திகளைச் சொன்னர் பேராசிரியர் த. சஞ்சீவி அவர்களோ நூலுக்கு அணிந்துரை கேட்டதும் சரலச் சுணக்கமின்றி தந்து வாழ்த்தினர்கள்.

இவர்கள் எல்லோருக்கும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.

இந்த நூலைப்படிக்கின்ற அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள். சித்த புருஷி பற்றிய செய்தித் தொகுப்பை உருவாக்குவது எளிதானதல்ல என்பது என் அனுபவம். செய்திகளைத் தொகுத்திருக்கிறேன், அவ்வளவுதான். உங்களுக்கு இதில் மாறுபாடு வருமென்றால் சிரமம் பாராது எழுதுங்கள். மறுபதிப்பில் திருத்திக் கொள்கிறேன்.

இவன்

அ. கா. பெருமாள்.

ஓம்

அன்னை மாயம்மா

ஒன்று

"நீலத்திரை கடல் ஓரத்திலே
நித்தம தவம் செய்யும் குமரி அன்னை"

என்பது தமிழ்க் கவிஞன் பாரதியின் வாக்கு. இந்த உலகம் இனிது வாழ நாளும் தவம் செய்து கொண்டே இருக்கிறாள் அன்னை குமரி.

"குமர் என்ற தெய்வம் இந்தியாவின் தெற்கே கடற் கரையில் குடிகொண்டு இருந்தது. மக்கள் அதை நாளும் வழிபட்டார்கள்" என்று கூறுகிறான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்க நாட்டில் வாழ்ந்த பெரிப்ளூஸ் என்ற அறிஞன்.

பாரதத்தின் தென் கோடியில் அமைந்திருப்பதால் கன்னியாகுமரிக்குப் புவியியல் முக்கியத்துவம் உண்டு. வரலாற்றுக் காலம் தொட்டே அது ஆன்மீகத்தோடு தொடர்பு கொண்டது என்பது நமக்குத் தெரிந்த ஒன்று.

காசியை நினைக்கும் இந்து, கங்கை நீரில் குளிக்கும் இந்து கன்னியாகுமரியை நினைக்காமலிருப்பதில்லை.

தென்குமரியில் நீராடி விட்டு கால் நடையாகவே காசிக்குச் சென்ற மாந்தர்களின் வரலாற்றை இலக்கியங்கள் கூறுகின்றன.

குமரியில் நீராடி விட்டு கங்கைக்குச் சென்ற பயணிகளைப்பற்றிக் கூறும் செவிவழிக் கதைகள் ஏராளம் உண்டு.

முக்கடலின் சங்கமத்தில் மூழ்கி எழுந்தால் முன்வினை எல்லாம் போகும் என்பது பாரம்பரியமான நம்பிக்கை.

இந்து தர்மத்தின் பெருமையினை வெளிநாட்டினர்க்கு அறிவிக்க விடை பெற வேண்டி குமரி அன்னையிடம் வந்தார் ஆன்மீகச் செல்வர் விவேகானந்தர். வந்து முக்கடல் கூடும் இடத்தே முளைத்த பாறையின் மீது மோனத் தவம் இருந்தார்; வீரராய்த் திரும்பினர். இந்த உண்மை வரலாறு இந்த நூற்றாண்டில் நடந்தது.

அந்த ஆன்மீகச் செல்வன் இருந்த பாறையில் அவருக்கு இன்று நினைவாலயம் எழுப்பி விட்டனர் அது உப்பு கலந்த காற்றிற்கும் கடும் குளிருக்கும் எதிர்ப்பு காட்டி நிமிர்ந்து நிற்கின்றது.

கல்லில் கலை வண்ணம் காட்டி நிற்கும் அதன் அழகைக் காண வரும் கூட்டம் கொஞ்சமல்ல.

எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் மொழியால் இனத்தால் வேறுபட்டு நிற்கும் கிராமங்களில் உறையும் மக்கள் இதன் பேரழகைக் காண ஆண்டு தோறும் கூட்டமாய் வருகின்றனர். இது பெருகிக் கொண்டு போவது அதிசயமான நிகழ்ச்சி அல்ல.

'கன்னியாகுமரி' — இன்று இந்தியத் துணை கண்டத்தில் வாழும் மக்களுக்கு, வெளி நாட்டுப் பயணிகள் பலருக்குத் தெரிந்த இடமாகி விட்டது.

அலை வீசும் உப்பு நீரின் நடுவே அசையாது நிற்கும் மண்டபமும் வரலாற்றுப் புகழ் பெற்ற அன்னை குமரியின் கோவிலும ஆன்மீக ஒளி பரப்பும் விவேகானந்தபுரமும் பலருக்கு இன்று காட்சிப் பொருள்களாகி விட்டன.

ஆனால். விளம்பரம் வேண்டாது, சுக போகங்கள் வேண்டாது விருப்பு வெறுப்பின்றி. நிர்மலப் பார்வையுடன் நீலத்திரைக் கடலோரத்தில் பாரதத்தின் இறுதி மண்ணில் அமைதியே உருவாக வாழ்கிறாள் அன்னை மாயம்மா.

குமரியின் புகழ் அவ்வன்னையால் மேலும் ஏற்றம் பெற்று விட்டது.

இரண்டு

குமரி அன்னை கோவிலின் தெற்கே மதிலை ஒட்டி பெரிய மணல் பரப்பு உண்டு. அதில் ஆதிசங்கரர் அமர்ந் திருக்கும் மண்டபம் தெற்கு நோக்கி இருக்கிறது. அம் மண்டபத்தின் வலது புறம் கைப் பிடிச் சுவரை ஒட்டி தரை மட்டத்திற்கு ஓலைக் குடில் ஒன்று இருக்கிறது. அன்னை மாயம்மாவின் இருப்பிடம் அதுதான். மேற்கு பக்கமும் கிழக்கு பக்கமும் அதற்கு வாயில்கள் உண்டு.

ஓலைக் குடிலின் கீழ்ப்புறம் பாறைகள் நிறைந்த பகுதி. ஒலிக்கும் கடலின் உப்பு நீர்த்துளிகள் அப் பாறைகளில் மோதி ஓவெனச் சத்தமிட்டு குடிலின் கீழே வரும்; சில சமயம் அதற்கு மேலும் நீர்த்துளிகள் தெறிக்கும்.

காலை வைத்தால் வழுக்கி விடுமோ என்ற அச்சத்தை ஊட்டும் பச்சை நிறப் பாசிகள் அப் பாறைகளை மூடி யிருக்கும்.

காலைக் கதிரவனின் கதிர்கள் பரந்த கடலில் பட்டுத் தெறித்து உடம்பின் உள்ளே நேராகப் பாய்கின்ற நேரம்.

அன்னை மாயம்மாவைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அதே இடத்தில் அதே நேரத்தில் பல முறை கண்டிருக்கிறேன்.

அப்போது அம்மாவை அறிந்தவர்கள் குறைவு. அம்மா அப்போது செய்த செயலைத்தான் இப்போதும் செய்கிறார். ஆனால் அன்று யாரும் அவர் செயலுக்கு உதவவில்லை.

அம்மா அப்படித்தான் இருக்கிறார். சுற்றிய கூட்டம் அம்மாவைப் புரிந்திருக்கிறது.

குமரி அம்மனின் நேர் பார்வையின் கீழே உள்ள கடலை ஒட்டிய பகுதியைக் 'காயத்ரி' தீர்த்தம் என்பர்.

அப் பகுதியில் பெரிய சிறிய பாறைகள் உண்டு. அதைச் சுற்றி உள்ள இடங்களில் குவித்து கிடந்த குப்பை களைப் பொறுக்கிக் கொண்டிருந்தார் அம்மா.

பழைய பேப்பர், வாழைச் சருகுகள், எச்சில் இலை கள், கந்தல், பழைய சாக்கு - இப்படிப் பல.

அம்மாவின் பின்னே சென்ற சீடர்கள் இராஜேந்திரன், வாரணாசியிலிருந்து வந்த யோகி, கோபிநாதன் ஆகியோர் குப்பைகளை வட்டியில் சேகரித்துக் கொண்டிருந்தனர். வட்டியில் குப்பைகள் நிரம்பி வழிந்ததும் கடல் நீரின் ஸ்பரிசம் படாத பாறைச் சரிவில், ஒரு இடுக்கில் அதைக் கொட்டினார்கள் சீடர்கள்.

இந்தச் செயல் வெகு வேகமாக நடந்துகொண்டிருக் கிறது.

சீடர்கள் குப்பைகளை வேகமாகச் சேகரிக்க ஆரம் பித்ததும், அம்மா கடற்பாசிகளைச் செத்த நண்டுகளை, கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் குவித்தார். அவை சீடர் களின் வட்டியில் சங்கமமாயின.

காலை பத்து மணி வரை இந்த வேலை தொடர்ந்து நடக்கிறது; இதற்கு மணிக்கணக்குக் கிடையாது குப்பை களின் கூட்டத்தைப் பொறுத்தது அது

அம்மா குப்பைகளைப் பொறுக்குவதைக் கருமமாகச் செய்கிறார். கல்லின் இடையே பாறைகளின் இடையே சிக்கித் தவிக்கும் பழைய கோணிகளைக் கூட வலிந்து எடுத்துக் குப்பைக் கூட்டத்தில் போடுகிறார். சீடர்கள் கூட அச் செயலைக் கடுமையாக நினைக்கின்றனர்.

குப்பைகள் அம்பாரம் போல் குவிந்ததும் அதில் தீயை மூட்டினார் அம்மாவின் சீடர் இராஜேந்திரன். தீ மெல்லப் பரவியதும் இரு இரும்புக் கழிகளால் குப்பை களைக் கிளறிக் கொடுத்தனர் சீடர்கள். இந்தச் செய லுக்கு உதவியாக அம்மாவின் பக்தர்கள் சிலரும் சேர்ந்து கொண்டனர்.

அம்மா பாறைகளில் ஒட்டியிருக்கும் கடற் பாசிகளை ஈரத்தோடு எடுத்துப் போட்டார். சீடப்பெண் சிவகாமி அப்பாசிகளைப் பிழிந்து ஈரம் போக்கி வெயிலில் உலர

வைத்து தீயில் போட்டார். தீ வேகமாகப் பரவியது. உயர்ந்து வளர்ந்தது. குப்பைகள் சாம்பலாயின.

அம்மா தீ எரிந்து கொண்டிருந்த இடத்திலிருந்து அப்பால், ஒரு பாறையில் கால்களிரண்டையும் மடக்கி குந்தியிருந்தார். பரந்த கடலை நிர்மலமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அம்மாவைப் பார்த்து வயதை மதிப்பிடுவதாக இருந்தால் எழுபது முதல் எண்பது வரை கூறலாம்.

நரை விழுந்த குட்டையான மயிர்கள் காற்றில் அசைய பொக்கை வாயை மென்று கொண்டிருந்தார். சில சமயம் தனக்குத் தானே பேசிக் கொண்டிருப்பார்.

அம்மாவை ஒரு முறை பார்த்ததும் அவர் ஆன்மீக வாதி என்றே தெய்வத் தன்மை பொருந்திய ஆன்மா என்றே ஜீவன் முக்தி என்றே யாரும் கண்டு பிடித்து விட முடியாது. யாரும் புரிய முடியாதது அந்தத் தோற்றம்.

மூன்று

குப்பைகள் சாம்பலாகிக் கொண்டிருந்தன. சீடர் இராஜேந்திரன் அம்மாவின் அருகில் வந்தார். மேலே இருந்த சட்டையைக் கழற்றினார்.

அம்மா தாம் இருந்த இடத்திலிருந்து சிறிது தள்ளிச் சென்றார். அரையில் உள்ள ஆடையை அவிழ்த்து இராஜேந்திரனிடம் கொடுத்தார்.

மெல்ல நடந்து சென்று கடல் நீரில் இறங்கினார். திரு. இராஜேந்திரன் என்னிடம் சொன்னார் "அம்மா பதிவாக நீராடுகின்ற இடம் இதுதான்" என்று.

அந்த இடம், சங்கிலித் துறை என்று பேச்சு வழக்கில் அழைக்கப்படும் துறையின் இடது புறம் உள்ளது. சிறிய கல் மண்டபத்தை ஒட்டிய பகுதி அது.

அம்மா குளிக்க இறங்கிய இடம் பாறைகள் நிறைந்த பகுதி. சாதாரண மனிதர்கள் யாருமே ஏன் கன்னியாகுமரி மீனவர்கள் கூட இறங்க அஞ்சும் இடம் அது.

காலை வைத்தால் இந்த இடம் வழுக்குமா வழுக்காதா இந்த இடத்தில ஆழம் அதிகமா இல்லையா. இங்கு நீரோட்டம உண்டுமா. என்ற ஆராய்ச்சி அம்மாவிற்கு இருந்ததாகத் தெரியவில்லை

பழகிய பாதையில் மாலை நேரம். நடப்பதைப் போலக் கடலின் பகுதியில் இறங்கிச் சென்றார்.

சிறிய பெரிய அலைகள் மெதுவாக வந்தன; வேகமாக வந்தன; பாறைகளில் மோதின; அம்மாவின் மீது பட்டன; குனிந்து அலைகளுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டு கிளிஞ்சல்களைப் பொறுக்கினர் அம்மா. சில சமயம் நீரில் மூழ்கி வெளியே வருவார். அப்போது கிளிஞ்சல்களும் பாசிகளும் அவர் கையிலிருக்கும். செத்த நண்டுகளும் மீன்களும் கூட பரந்த கடலின் பகுதியில் இருப்பது அம்மாவிற்கு எப்படித் தெரியுமோ? அவற்றைப் பொறுக்கிக் கரையில் விட்டெறிந்தார். வட்டியுடன் காத்திருந்த திரு. இராஜேந்திரன் அவற்றை எடுத்து வட்டியில் போட்டுக் கொண்டார்.

சில முறை அம்மா கரையிலேயே வந்து பாசிகளையும் கிளிஞ்சல்களையும் தாமே வட்டியில் போட்டார். நான் திரு. இராஜேந்திரனின் பக்கம் நின்று கொண்டிருந்தேன்

அம்மா அப்போது நிர்வாணமாகத் தான் இருந்தார். ஆனால் அந்த ஸ்மரணை அவருக்குத் துளி கூட இல்லை

பார்வையில் பழைய நிர்மலந்தான். நேராக நோக்கிப் புரிந்து அருள் செய்யும் தன்மை முழுதும் இருந்ததாகத் தெரியவில்லை. நான் அன்று கண்ட பிறகு பல நாட்கள்

அம்மாவைச் சந்தித்தேன். எல்லா நாட்களிலும் பார்வை ஒன்றுகத்தான் இருந்தது.

கடல் நீரில் வழுக்கும் சிறிய பாறையில் காலை வைத்து அடுத்த பாறையில் தாண்டுவது ஆச்சரியமான செய்கை தான்.

அம்மா வெகுநேரம் நீராடிக் கொண்டிருந்தார். நீரில் மூழ்குவார். பின் எழுந்து கையில் உள்ள கந்தலைக் கசக்கிப் பிழிவார். அதை நீரில் முக்கிப் பிழிந்து கசக்கிப் பிழிந்து—இந்தச் செய்கையை அலுப்பில்லாமல் பலமுறை செய்து கொண்டிருந்தார்

திரு இராஜேந்திரன் பொறுமையாகக் கரையில் நின்றார். அம்மா கரையில் வந்ததும் அவரது கையில் ஒரு துண்டைக் கொடுத்தார். உடலைத் துடைத்துக் கொண்டார் அம்மா; சீடரும் அதற்கு உதவினர். விலை உயர்ந்த பனியனை அம்மாவின் கையில் கொடுத்தார். அம்மா அதைப் போட்டுக் கொண்டார், கௌபீனத்தைக் கொடுத்தார்; கட்டிக் கொண்டார்.

அரையில் சிறிய ஆடையையும் கட்டிக் கொண்டார்.

நான்கு

காலை உணவு ஆரம்பமானது. உணவு கன்னியா குமரியில் உள்ள மீனாட்சி பவன் உணவு விடுதியிலிருந்து வருகிறது. அதற்குரிய செலவைத் தூத்துக்குடித் தொழிலதிபர் திரு. இராஜமாணிக்கமே கொடுக்கிறார். அவர் கன்னியாகுமரி மாயம்மா சமாஜத்தின் தலைவர்; சமாஜ மண்டபத்தைக் கட்டியவர்.

ஒரு எவர்சில்வர் தட்டில் பச்சரிசிச் சோற்றைப் போட்டு குழம்பை ஊற்றிப் பிசைந்து அம்மாவுக்கு ஊட்டி

னர் திரு. ராஜேந்திரன். அம்மா தட்டிலிருந்த உணவைக் கை நிறைய வாரி சீடருக்கு ஊட்டினர்.

அவ்விருவரையும் சுற்றி இருபது நாய்கள் இருந்தன. குட்டிகள், காலொடிந்தவை, சிரங்குடையவை, அருவருப்பானவை—இப்படிப் பல. அம்மா நாய்களுக்குச் சோற்றை உருட்டிப் போட்டார்.

அருகிலிருந்த வாரணாசி யோகி அம்மாவிடம் கையை நீட்டி சோற்றை வாங்கிக் கொண்டார். அம்மாவின் கையில் ஒட்டியிருந்த சோற்றுப் பருக்கையை வழித்து நக்கிக் கொண்டார்.

இதற்கிடையில் சில பக்தர்கள் பழம், பன் போன்ற உணவுப் பொருட்களை அம்மாவிடம் கொடுத்தனர். அவர், அவற்றை நாய்களுக்குப் போட்டார். மீதியைச் சுற்றி நின்றவர்களிடம் கொடுத்தார். அவர்கள் அதைப் பிரசாதமாக வாங்கிக் கொண்டனர்.

அம்மா உண்டு முடிந்ததும் சீடப்பெண் சிவகாமிக்கும் சுவாமிநாதனுக்கும் கொடுத்தார்.

அம்மாவின் கையையும் வாயையும் கழுவி விட்டார் திரு. ராஜேந்திரன். குடிக்க நீரும் கொடுத்தார். அம்மா பாதி நீரைக் குடித்துவிட்டு மீதியை அவருக்குக் கொடுத்தார்.

அன்றுடம் நடக்கின்ற நிகழ்ச்சி இது. நான் அம்மாவோடு தங்கிய நாட்களில் இதைத் திரும்பத் திரும்பக் கண்டேன்.

இந்தச் செய்கைகள் முடிந்த பிறகு அம்மா தன் குடிலில் போய் இருப்பார். அல்லது கற்பாறையிலேயே படுத்துக் கொள்வார். சுற்றிலும் சீடர்கள் மௌனமாக அமர்ந்திருப்பார்கள்.

மாலையிலும் குப்பைகளைப் பொறுக்கும் வேலை தொடர்கிறது. முன் போலவே வட்டியுடன் சேகரித்துக் குவித்து எரிக்கிறார்கள்.

இப்படிக் குப்பைகளைச் சேகரிப்பது எரிப்பது என்பதற்கெல்லாம் இவ்வளவு என்ற கணக்கு இல்லை

இது போலவே அம்மா காலையில் எழுந்திருப்பதற்கும் மாலையில் உறங்குவதற்கும் குறிப்பிட்ட நேரம் கிடையாது. காலையில் 6 மணிக்கும் எழுந்திருக்கலாம 7 மணிக்கும் எழுந்திருக்கலாம் இரவு உறங்கப் போவதும் அப்படித்தான். 8 மணிக்கும் உறங்குவதுண்டு 12 மணி வரை விழித்திருப்பதும் உண்டு.

ஐந்து

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அம்மாவைப் பற்றிக் கன்னியாகுமரியில் உள்ள மக்களிடம் கேட்டால் அவர் தெய்வத்தன்மை பொருந்திய ஆன்மா என்று சொல்லமாட்டார்கள் ஆனால் அவர் கைராசியுடையவர் என்ற மதிப்பு கன்னியாகுமரி கடைக்காரர்களிடம் உண்டு.

அம்மாவைப் பற்றிய சிறு குறிப்பு ஒன்றை வெளியிட வேண்டும் என்று நான் சென்ற போது எனக்குக் கிடைத்த செய்திகளுள் இது சுவையானது.

"அவள் ஒரு (Mental complex) (மன வியாதி பிடித்தவர்) குளிரோ சூடோ பாதிக்காத அளவுக்கு வலுப் பெற்ற உடலையுடைய கிறுக்கு. கிறுக்குகளில் 'அது கிறுக்கு' என்று யாரும் கண்டு பிடிக்க முடியாத வகை இது. அதனால்தான் கடும் குளிரிலும் கடற்கரையில் இருக்கிறாள்; நீரில் நீந்துகிறாள்; அச்சமின்றி இறங்குகிறாள்; பாறைகளுக்கிடையில் கையை விடுகிறாள்; அவ்வளவுதான். மற்றபடி ஊருக்கு ஊர் பஸ் நிலையங்களில் கைராசிப் பிச்சைக்காரர்கள்

இருப்பார்களே, அந்தப் பட்டியலில் இவளும் ஒருத்தி. குப்பைகளை எரிப்பது நாய்களைப் பராமரிப்பது; உணவு ஊட்டுவது போன்ற செய்கைகளுக்கெல்லாம் எந்த அர்த்தமும் இல்லை வெறும் பைத்தியக்காரத் தனம் தான்" என்பது அச் செய்தி

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நான் அம்மாவைப் பார்த்த போது அம்மா கோவில் சந்நிதியில் நாய்கள் புடை சூழ பிச்சைக்காரியைப் போல் நின்று கொண்டிருந்தார்

சிலர் கேட்காமலேயே அவருக்கு எதாவது கொடுத்து விட்டுச் சென்றனர்.

கொடுத்தவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்துவது போல எந்தச் செய்கையும் அம்மா செய்யவில்லை.

அப்போது அவர் பெயரில் சமாஜம் கிடையாது.

அவர் தங்குவதற்கு ஓலைக்கூரையோ உறங்குவதற்குக் கட்டிலோ கிடையாது.

உணவுக்கு ஏற்பாடு செய்ய திரு. இராஜ மாணிக்கம் கிடையாது.

உணவு ஊட்டி, பராமரிக்க திரு. இராஜேந்திரன் கிடையாது.

அம்மா குப்பைகளைச் சேகரிக்கச் செல்லும் போது கோபிதையோ யோகியோ கிடையாது.

கன்னியாகுமரிக்கு வரும் பயணிகளின் பார்வை கூட முழுவதுமாய் அம்மா மீது பட்டது கிடையாது.

அவரை அப்போது யாரும் புகைப்படம் எடுத்துத் தன் வீட்டில் மாட்டிக் கொள்ளவில்லை; வழிபடவில்லை.

இன்று நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவரைச் சீவன் முக்தியாக நினைத்து அருள் பெற வரும் கூட்டம் அதிகரித்து விட்டது. பழங்களை உணவுப் பொருள்களை

வைத்துக் கொண்டு "அம்மா சாப்பிடுங்கள்; சாப்பிடுங்கள்" என்று கூறி இறைஞ்சி அவர் கால்களில் விழுகின்ற பக்தர் கள் பெருகி விட்டனர்.

அம்மா யார்? பூர்விகம் எங்கே? வயது என்ன? அவர் இங்கே என்ன செய்கிறார்? இத்தனை பக்தர்கள் அவருக் குப் பெருகி வருவது எதனால்? இந்தக் கேள்விகளுக்கு விடை காண்பது எளிமையானதல்ல.

நதிமூலம் ரிஷிமூலம் காணமுடியாதென்பது பழைய வாக்கு.

அம்மாவின் அடித்தொண்டர்களை, அம்மாவோடு தொடர்புடைய வயதான மனிதர்களைச் சந்தித்ததில் எனக்குக் கிடைத்த செய்திகளை மட்டும் இங்கு தொகுத் திருக்கிறேன்.

அம்மாவின் ஆன்மீக நோக்கைப் புரிந்து, வெளிப் படுத்தக் காலம்தான் துணை நிற்க வேண்டும்.

ஆறு

"நாற்பது ஆண்டுகளுக்கு முன் வங்காள மாநிலத்தி லிருந்து பயணிகள் சிலர் கன்னியாகுமரிக்கு வந்தனர். அவர்களோடு மாயம்மாவும் வந்தார். வந்த கூட்டம் அவரைத் தனியே விட்டுச் சென்றது. தனியே விடப் பட்ட அப்பெண்ணுக்கு வயது நாற்பது இருக்கும்.

மொழி, இனம் இவற்றிற்கு அப்பாற்பட்ட இடத்தில் விடப்பட்ட அப்பெண், யாரிடமும் பேசுவதில்லை. எப் போதாவது வங்காள மொழியில் ஓரிரு வார்த்தைகள் சொல்லுவார்.

நல்ல உடல் வாகு கொண்ட அவர் கன்னியாகுமரி பரதவர் குடியில் அடிக்கடி இருந்தார். ஊரில் உள்ளவர்

களுக்கு மாவிடித்துக் கொடுத்தும், மாவரைத்துக் கொடுத்தும், கிடைத்ததை உண்டு வயிறு கழித்து வந்தார். அப்போது அவர் பரதவர் குடியின் எல்லையைத் தாண்டி கோவில் பக்கமோ சந்நிதிக் கடைகள் பக்கமோ வந்தது கிடையாது. அந்தப் பெண்தான் இப்போது மாயம்மாவாக இருக்கிறார்.

மாயம்மாவைப் பற்றிக் கன்னியாகுமரி பரதவர் குடியில் இப்படிச் சிலர் கூறினர்கள். ஒரு முதியவர் "என் வீட்டில் அவள் மாவிடித்திருக்கிறாள்; கூலியாக கருவாட்டைக் கொடுத்திருக்கிறேன்" என்றார்.

சுவாமிநாதன் திருச்சியைச் சொந்த ஊராகக் கொண்டவர். தமிழ் நாட்டுச் சித்த புருஷர்களோடு தன் வாழ்வைக் கழித்துக் கொண்டிருக்கிறார். அம்மாவோடு ஏழாண்டுகள் தொடர்பு. அவர் "அம்மா நேபாளத்தைச் சார்ந்தவர் சந்தேகமில்லை" என்றார்.

ஐந்தருவியில் உள்ள சங்கரானந்தா என்ற துறவி மூப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கன்னியாகுமரிக்கு வந்திருந்தாராம். அம்மா இப்போது இருப்பது போன்ற நிலையில் இருந்ததை அவர் கண்டாராம்.

சுவாமி சிவானந்தா கன்னியாகுமரிக்கு வருகை தந்த போது உள்ளூர் பக்தர்கள் மாயம்மாவைப் பற்றிக் கூறினார்களாம். சுவாமி அம்மாவைத் தேடிச் சென்று பார்த்து விட்டு, இது நிச்சயமாக ஜீவன் முக்தி தான்; சந்தேகமில்லை என்றாராம்.

கோவிந்தன் ஆசாரி என்பவர் ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர். ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடுடையவர் அவர் அம்மாவைப் பற்றிக் கூறிய செய்தி புதுமையாக இருந்தது.

"நான் 54 ஆண்டுகளுக்கு முன் கன்னியாகுமரிக்கு என் தந்தையோடு சென்றிருந்தேன். அப்போது எனக்கு 12 வயது இருக்கும். சங்கிலித் துறையின் பக்கம் கூட்

டமாக இருந்தது. சென்று பார்த்தேன்; 35 அல்லது 40 வயது மதிக்கத் தக்க பெண் ஒருத்தி ஒரு கந்தலை நீரில் முக்கிப் பிழிந்து கொண்டிருந்தாள். அந்தச் செயலை அவள் தொடர்ச்சியாக, ஆனால் கொஞ்சம் கூடச் சலிப்பில்லாமல் செய்து கொண்டிருந்தாள்.

வருவோரும் போவோரும் அச்செயலைச் சில நிமிட நேரம் உற்றுப் பார்த்து விட்டுச் சென்றார்கள்.

அந்தப் பெண் அரையில் மட்டும் ஓர் ஆடையை அணிந்திருந்தாள். அவளுக்கு மாயி என்ற பெயர் இருந்ததாக யாரும் கூறவில்லை.

அவளைப் பார்த்துக் கொண்டிருந்த உள்ளூர்காரர்களில் ஒருவர் "பைத்தியம் என்று கூறியதாகத்தான் ஞாபகம்" என்றார்.

கன்னியாகுமரியைப் பிறந்த ஊராகக் கொண்ட ஒரு பெண் அம்மாவைப் பற்றிக் கூறிய செய்தி இது,

"கன்னியாகுமரியில் பழைய போஸ்ட் ஆபீஸ் பக்கம் ஒரு குப்பை மேடு உண்டு. அதில்தான் அம்மா இருப்பார்.

கையில் ஒரு கந்தலும், கரிச்சட்டியும் இருக்கும். சட்டியில் எப்போதும் கருவாடு இருக்கும். அது பரதவர் குடியில் மாவிடித்ததற்குக் கிடைத்த கூலி.

அவர் குப்பைகளில் நெருப்பை மூட்டி கருவாட்டைச் சுட்டுக் கடித்துத் தின்பதை அடிக்கடி பார்த்திருக்கிறேன். குப்பை மேட்டில் குந்தி இருந்த அந்தக் காட்சி 30 ஆண்டுகளுக்கு முன்பு நான் கண்டது. என் நினைவில் அம்மாவைப் பற்றி பசுமையாகப் படிந்தது இதுதான்" என்று கூறினர் அந்த முதிய பெண்.

ஏழு

சரோஜினி அம்மா தீவிரமான மாயி பக்தை. கன்னியாகுமரி மாயம்மா சமாஜத்தின் காரியதரிசியாக இருந்தவர். விவேகானந்தபுரம் அஞ்சல் அலுவலகத்தில் எழுத்தராகப் பணி புரிகின்றார்.

அவர், அன்னை மாயம்மா தேவியின் அற்புத வரலாறு என்ற துண்டு வெளியீட்டில் (pamphlet) மாயம்மாவோடு தனக்குரிய உறவைக் கட்டுரையாக எழுதியிருக்கிறார்.

"அன்பே உருவமாக புன்னகை தவழும் முகமுடன் உலகப் பற்று எதுவுமே இல்லாமல் அன்னை மாயம்மா கன்னியாகுமரி கடற்கரையில் வீற்றிருக்கிறார்.

இந்தத் தாய் நாற்பது வருடமாக இங்கிருந்தும் இவர் எங்கிருந்து வந்தார் எப்படி வந்தார் என்று யாருக்குமே தெரியாது.

அவர் யாரிடமும் அதிகம் பேசுவதில்லை. பேசினாலும் அது ஹிந்தியா, மராட்டியா என்று யாருக்குமே புரிந்து கொள்ள முடியாது. யார் எந்தப் பாஷையில் பேசினாலும், அதையே திருப்பி பேசுவார்.

இந்தத் தெய்வம் தன்னுடன் நான்கு நாய்களைத் துணையாக வைத்துக் கொண்டிருக்கிறது. இது தனக்குக் கிடைக்கின்ற ஆகாரங்களை நாய்களுக்கும் ஊட்டி தானும் உண்ணுகிறது.

காசோ பணமோ எது கிடைத்தாலும் அதைத் தனக்குத் தேன்றியவருக்குக் கொடுத்து விடுவார் அம்மா.

இந்தத் தெய்வத்தை இருபது வருஷங்களுக்கு முன்னாலேயே நான் பார்த்திருந்தும் அவர் யாரென்று அறியாமலேயே இருந்தேன். ஆனால் அவர் அருளாலே ஆறு

வருடமாக அவரை அறியும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

கன்னியாகுமரியில் அன்னை மாயியைப் பற்றி எனக்குத் தெரிந்த ஒரு அம்மா (பகவதி அம்மா) விவரங்கள் சொன்னார். அவருடன் அன்னையைத் தரிசிக்கக் கன்னியாகுமரிக்குச் சென்றேன். கடற்கரையில் தென் கோடிப் பாறையில் அம்மா உட்கார்ந்திருந்தார். பகவதி அம்மா பழம் கொடுத்தாள். அதை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே என்னையும் அழைத்து அந்தப் பழத்தைத் தந்தார். நான் அம்மா கொடுத்த பழத்தைச் சாப்பிட்டு விட்டு, பத்து பைசா நாணயத்தை அவரிடம் கொடுத்தேன். அம்மா அதைத் தேய்த்துக் கழுவி சுத்தமாக வைத்துக் கொண்டாள்.

எனக்கு என்னவோ போலிருந்தது. பிறகுதான் புரிந்தது, என் உள்ளத்தில் உள்ள அழுக்கைத்தான் அந்தத் தெய்வம் கழுவி சுத்தமாக்கி இருக்கிறாள் என்று.

ஒருநாள் ஜெயலட்சுமி என்ற சந்யாசினியைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. அவர் "மாயம்மாவைச் சாதாரணமானவர் என்று எண்ணி விடாதீர்கள்; அவர் சாட்சாத் ஈஸ்வரியின் அம்சமாகும்; தேவிகுமரியின் சைதன்யம் அம்மாவிடம் இருக்கிறது" என்று கூறினார்.

ஒரு நாள் மாலையில் அம்மாவைப் பார்க்கப் போயிருந்தேன், அம்மா கை நிறையப் பணம் எடுத்து என்னிடம் நீட்டினார். நான் அழுது விட்டேன். "அம்மா இந்த ரூபாய் எனக்குத் தேவையில்லை; நீ தான் வேண்டும்" என்றேன். அம்மா சிரித்துக் கொண்டே ஆசீர்வாதம் பண்ணினார்.

சரோஜினி அம்மா அந்தக் கட்டுரையில் எழுதியிருப்பது தவிர தன் நினைவில் மாயம்மா பற்றி நின்ற செய்திகளை என்னிடம் கூறினார்.

மாயம்மா அஷ்டமா சித்து அறிந்தவர்; சித்து கை வரப் பெற்று அற்புதங்களைக் காட்டியிருக்கிறார் என்று

யாரெல்லாமோ கூறுகின்றார்கள். ஆனால் நான் அம்மா அற்புதம் காட்டியதை நேரில் கண்டதில்லை. அதே சமயத்தில் அம்மாவின் சக்தியால் ராஜம்மா என்பவருக்கு அதிசய சக்திகள் வந்தது எனக்கு நன்கு தெரியும்.

இராஜம்மாவிற்கு 55 வயது இருக்கும். சுசீந்திரத்தில் முன்பு இருந்தார். அவர் மாயம்மாவின் பக்தர். அம்மாவைத் தரிசிக்க அடிக்கடி கன்னியாகுமரிக்கு வருவார்; அவரது உறவினர்கள் அம்மாவைப் பழித்த போது கூட அதைப் பொருட்படுத்தாமல் அம்மாவை வழிபட்டவர் அவர்.

ராஜம்மாவை எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு முறை என் வீட்டிற்கு ராஜம்மா வந்திருந்தார். அப்போது கார்த்திகை மாதம். என் வீட்டில் ஐயப்ப பூஜை நடந்து கொண்டிருந்தது.

ராஜம்மா படத்தின் முன்னால் நின்று ஐயப்பனைத் தொழுது கொண்டிருந்தார். அப்போது அவர் கையிலிருந்து திருநீறு விழுந்தது; சந்தனம் வழிந்தது. நான் திகைத்துப் போய் "என்ன அக்கா இது கையிலே சந்தனம்" என்று கேட்டேன். அவர் அமைதியாக "ஒன்றுமில்லை எல்லாம் அம்மாவின் அருள்தான்" என்றார்.

ஒரு முறை சுசீந்திரம் கோவிலில் நானும் ராஜம்மாவும் ஆஞ்சநேயரைத் தொழுது கொண்டிருந்தோம். அப்போதும் அவர் கையிலிருந்து பாலும் குங்குமமும் வந்ததைக் கண்டேன்.

நான் அறிந்த வரை அம்மா மூலமாக அற்புதங்கள் பெற்றவர் இராஜம்மா ஒருவர் தான்.

அம்மா இப்படி ஒரு அற்புத சக்தியை அவருக்குக் கொடுத்ததாகக் காட்டிக் கொள்ளவே இல்லை. நானும் இராஜம்மாவும் மாயம்மாவிடம் சென்ற போது எந்த வேறுபட்ட உணர்வுமின்றியே இருவருடனும் பழகினார்.

1974ல் ஜப்பான் நாட்டிலிருந்து யோகி ஒருவர் கன்னியாகுமரிக்கு வந்திருந்தார். அவர் அம்மாவிடம் அதிக ஈடுபாடுடையவர்.

அம்மாவிற்கு உண்பதற்கு எதாவது வாங்கிக் கொடுப்பார். கொடுத்து விட்டு சற்றுத் தள்ளி நின்று கொண்டு அவர் உண்பதையே பார்த்துக் கொண்டிருப்பார்.

அம்மா அவருக்கு உண்பதற்கு எதாவது கொடுத்தால் உண்ணமாட்டார். அதை வாங்கிப் பக்கத்துக் கல்லில் வைத்து விட்டு அமைதியாக இருப்பார்.

தினமும் இந்த நிகழ்ச்சி நடந்தது. இறுதியில் அவர் உண்ணுமலேயே உயிரை விட்டார். கன்னியாகுமரியிலேயே அவரை அடக்கம் செய்தார்கள்.

எட்டு

கன்னியாகுமரியில் மாயம்மாவைத் தெய்வீக புருஷியாக்கியது சில நிகழ்ச்சிகளும் அவரது கைராசியும்தான். அதன் பிறகே அவரது அருள் வழங்கும் தன்மையை எல்லோரும் புரிந்தார்கள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது.

எங்கோ இருந்து வந்த 'டூரிஸ்ட் பஸ்' கன்னியாகுமரி சாலையில் படுத்திருந்த ஒரு நாயின் மீது ஏறிவிட்டது; நாய் அலறியது; அக்கம் பக்கத்தில் நின்றவர்கள் அந்த நிகழ்ச்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.

நாயின் வயிறு கிழிந்து குடல் வெளியே தள்ளியது. அந்த நேரத்தில் மாயம்மா வந்தாள். துன்பமுற்றுக் கிடந்த நாயைத் தன் மடியில் தூக்கி வைத்துத் தடவிக்

கொடுத்தார். வெளியே தள்ளப்பட்ட குடலை அதன் வயிற்றினுள் தள்ளினர்; கிழிந்த வயிற்றுப் பகுதியை வைக்கோலால் தைத்தார். கந்தல் துணியொன்றால் காயம் பட்ட இடத்தைக் கட்டினர். அவ்வளவு தான். நாய் பிழைத்துக் கொண்டது.

இந்த நிகழ்ச்சியை, அருகே இருந்து பார்த்தவர்கள் பிறரிடம் சொல்லிச் சொல்லி அம்மா பொது மக்களின் பார்வைக்கு உரியவரானார்.

இன்றுபோலவே பத்து ஆண்டுகளுக்கு முன்பும் சந்நிதித் தெருவில் திரிந்த மாயம்மா எது கேட்டாலும் கொடுக்கா உணவு விடுதிகள் கிடையா.

அம்மா கேட்டுக் கொடுத்தால் அன்று வீற்பனை நல்ல நடக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக இருக்கிறது.

அம்மா நம் கடையில் வந்து எதாவது கேட்க மாட்டார்களா என்று ஏங்கும் கடைக்காரர்கள் கூட உண்டு.

இப்போது, எப்போதாவது சந்நிதிக் கடை வீதியில் அம்மா சென்று இட்டலியோ வடையோ வாங்கித் தன்னுடன் வரும் நாய்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது உண்டு. இது அன்றாட நிகழ்ச்சி அல்ல.

அம்மாவிடம் பணம் வாங்கித் தொழில் நடத்தினால் அது செழிக்கும்; லட்சாதிபதியாகலாம் என்ற நம்பிக்கையில் பலர் அம்மாவிடம் கையேந்தி நிற்பார்கள்.

சிலர் அப்படிப் பணம் கிடைத்து தொழில் நடத்தி செல்வந்தரானதாகச் செய்திகளும் உண்டு.

திருவனந்தபுரத்தில் ஒரு துணி வணிகர் தம் தொழிலில் நஷ்டப்பட்டு சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாத நிலையில் அம்மாவிடம் வந்தார். அம்மா ஐந்து ரூபாய் அவருக்குக் கொடுத்தார். அவர் அதை வாங்கி மறுபடியும் தொழில் ஆரம்பித்தார். பின்னர் அவர் லட்சாதிபதியான

கொடுத்தார். வெளியே தள்ளப்பட்ட குடலை அதன் வயிற்றினுள் தள்ளினர்; கிழிந்த வயிற்றுப் பகுதியை வைக்கோலால் தைத்தார். கந்தல் துணியொன்றால் காயம் பட்ட இடத்தைக் கட்டினர். அவ்வளவு தான். நாய் பிழைத்துக் கொண்டது.

இந்த நிகழ்ச்சியை, அருகே இருந்து பார்த்தவர்கள் பிறரிடம் சொல்லிச் சொல்லி அம்மா பொது மக்களின் பார்வைக்கு உரியவரானர்.

இன்றுபோலவே பத்து ஆண்டுகளுக்கு முன்பும் சந் நிதித் தெருவில் திரிந்த மாயம்மா எது கேட்டாலும் கொடுக்கா உணவு விடுதிகள் கிடையா.

அம்மா கேட்டுக் கொடுத்தால் அன்று விற்பனை நல்ல நடக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக இருக்கிறது.

அம்மா நம் கடையில் வந்து எதாவது கேட்க மாட் டார்களா என்று ஏங்கும் கடைக்காரர்கள் கூட உண்டு.

இப்போது, எப்போதாவது சந்நிதிக் கடை வீதியில் அம்மா சென்று இட்டலியோ வடையோ வாங்கித் தன்னு டன் வரும் நாய்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது உண்டு. இது அன்றுட நிகழ்ச்சி அல்ல.

அம்மாவிடம் பணம் வாங்கித் தொழில் நடத்தினால் அது செழிக்கும்; லட்சாதிபதியாகலாம் என்ற நம்பிக்கை யில் பலர் அம்மாவிடம் கையேந்தி நிற்பார்கள்.

சிலர் அப்படிப் பணம் கிடைத்து தொழில் நடத்தி செல்வந்தரானதாகச் செய்திகளும் உண்டு.

திருவனந்தபுரத்தில் ஒரு துணி வணிகர் தம் தொழி லில் நஷ்டப்பட்டு சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாத நிலையில் அம்மாவிடம் வந்தார். அம்மா ஐந்து ரூபாய் அவருக்குக் கொடுத்தார். அவர் அதை வாங்கி மறுபடியும் தொழில் ஆரம்பித்தார். பின்னர் அவர் லட்சாதிபதியான

கெட்டவில்லையே என்று கதறினேன். எதற்கம்மா இந்தச் சோதனை என்று கேட்டேன்.

என் துயரத்தை அம்மா புரிந்ததாகவே தெரியவில்லை. குனிந்து நெருப்பைக் கிளறிக் கொண்டிருந்தார்.

இந்த நிகழ்ச்சி நடந்து ஒரு ஆண்டு கழிந்து ஒரு நாள் காலையில் அம்மாவைத் தொழுது விட்டு "என் வீட்டிற்கு வாருங்களேன் அம்மா" என்று அழைத்தேன்.

அம்மா நான் அழைத்ததைப் பொருட்படுத்தவில்லை. காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினேன். என்னை உதறித் தள்ளி விட்டார். எனக்குத் தாங்க முடியாத அழுகை வந்தது ; அழுதேன்.

அம்மா என்னைத் தள்ளி விட்டுக் கடலுக்குள் சென்றார். சிறிது நேரம் கழித்துக் கரைக்கு வந்தார். கையில் வலம்புரி விநாயகர் சிலை ஒன்று இருந்தது. (சங்கால் செய்யப்பட்டது)

சிலையை என் கையில் கொடுத்தார். எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை அவர் இருந்த இடத்தில் ஒரு பாறையில் வைத்தேன் இரண்டு மணிக்கூர் நேரம் அம்மாவுடனேயே இருந்தேன்".

அம்மா எடுத்துக் கொடுத்ததாகக் கூறும் விநாயகர் சிலை மாயம்மா சமாஜத்தில், அம்மாவின் பெரிய படத்தின் கீழ் இருக்கிறது

விநாயகர் சிலையைப் போலவே ஒரு சிவலிங்கத்தையும் அம்மா எடுத்துக் கொடுத்திருக்கிறார்.

அம்மா கடலில் ஆழமான பகுதிகளுக்கு நீந்திச் செல்வதுண்டு. அவர் இப்போது இருக்கும் இடத்தின் அருகில் உள்ள பாறைக் கூட்டங்களைத் தாண்டி நீல நிறக் கடலின் பரப்பில் நீந்துவதை நான் கண்டிருக்கிறேன். இது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால்.

சில சமயம் அலைவீசும் பகுதியில் மிதக்கக் கூடச் செய்வார்.

அம்மா இப்போது கடலில் நீச்சலடிப்பது இல்லை. மிக அபூர்வமாகப் பாறைகளைத் தாண்டிச் செல்கிறார்.

கடற்கரையை ஒட்டிய பாறைகளில் தாவி சிறிய கடல் பகுதிக்கு எப்போதாவது போகிறார்.

முன்பு விவேகானந்தா பாறைக்கு நீந்திச் சென்ற துண்டு. அப்போது அங்கு நினைவாலயம் இல்லை. வெறும் பாறையின் பரப்புதான் இருந்தது. அதில் மீனவர்கள் சிறிய மீன்களை உலரப்போட்டிருப்பர். அம்மா நீந்திப்போய் உலர்ந்த மீன்களை அங்கிருந்து எடுத்து வருவதுண்டு.

ஒன்பது

அம்மாவின் செய்கைகள் சில அர்த்தமற்றதாகத் தெரியும். அம்மாவோடு இருக்கின்ற ராஜேந்திரன் ஒரு முறை அதோ அம்மா என்ன செய்கிறார் பாருங்கள் என்று எனக்குக் காட்டினார்.

நான் அம்மாவின் அருகில் சென்றேன். உப்பு நீர் மோதித் தெறிக்கின்ற இரு சிறிய பாறைகளின் இடையே மணலைத் தோண்டிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் தோண்டியதும் உயிருள்ள நண்டு ஒன்றை எடுத்தார். உடனே அதைக் கடலில் எறிந்து விட்டார். பின்னர் அதே இடத்திலிருந்து சற்றுத் தள்ளி மணலைத் தோண்டினார். சற்று நேரம் தோண்டியதும் இசத்த நண்டு ஒன்று அவர் கையில் கிடைத்தது. அதைக் குப்பைகளுடன் போட்டார்.

குறிப்பிட்ட அந்த இடத்தில் செத்த நண்டு இருப்பது அம்மாவிற்கு எப்படித் தெரிந்தது? உயிருள்ள நண்டு மணலின் அடியில் இருப்பதை எப்படி அறிந்தார்?

ஆனால் எல்லா இடங்களையும் தோண்டிப் பார்க்க வில்லை. எல்லா நாட்களிலும் கூட அந்தச் செயலைச் செய்யவில்லை.

உயிருள்ள நண்டுக்கு அன்று அம்மாவின் கையால் விமோசனம் கிடைத்தது.

செத்த நண்டு கூட தன் பிறப்பை விட்டொழிக்க அம்மாவின் கையில் அகப்பட்டது.

பத்து

திரு. இராஜமாணிக்கம் மாயம்மா சமாஜத்தின் தலைவர். தூத்துக்குடித் தொழிலதிபர். சிறந்த பக்தர். இந்துமதப் பிரச்சாரத்திற்காகத் தன் சொந்தத் தொழிலைக் கூட இரண்டாம் பட்சமாக எண்ணிச் செயல்படுகிறவர்.

மாயம்மா சமாஜ மண்டபத்தைச் சுமார் நான்கு லட்ச ரூபாய் செலவில் தன் சொந்த முயற்சியாலே கட்டியிருக்கும் அவர் அம்மாவைச் சந்தித்த நிகழ்ச்சி விந்தையானது. அவர் கூறிய செய்தி இது.

1971–ம் ஆண்டு ஒரு நாள் திருவண்ணாமலை ஞான ஆனந்த சுவாமிகளிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப் போது என் அருகே விழுப்புரம் ஞான ஒளி ஸ்டுடியோ அதிபர் இருந்தார்.

ஸ்டுடியோ அதிபர் சுவாமிகளிடம் "சுவாமி நான் கன்னியாகுமரிக்குச் சென்று வந்தேன்; கன்னியம்மனைத் தரிசித்தேன்" என்றார்.

சுவாமிகள் அதற்கு "மிக்க மகிழ்ச்சி கன்னியாகுமரி யில் விலை மதிக்க முடியாத மாணிக்கம் ஒன்றைப் பார்த் தாயா?" என்று கேட்டார்.

ஸ்டுடியோ அதிபர் "ஆமாம், சுவாமி ; கன்னி பகவதி யின் மூக்கில் அழகொளிரக் காட்சி அளிக்கும் ரத்தினத் தைக் கண்டேன்" என்றார்.

சுவாமிகள் சிரித்துக் கொண்டே "இல்லையப்பா ! குமரிக் கடற்கரையில் கந்தல் உடுத்துக் கொண்டு அலை யும் அம்மாவைப் பார்த்தாயா ?" என்று கேட்டார்.

மாயம்மாவைப் பற்றி நான் அறிந்தது சுவாமிகள் வாயிலாகத்தான்.

1964-ல் கன்னியாகுமரி குருகுலத்துக்கு ஞான ஆனந்த சுவாமிகள் வருகை தந்திருந்தார். அப்போது அவர் அம்மாவைப் பார்த்திருக்கலாம்.

சுவாமி அம்மாவைப் பற்றிச் சொன்ன அடுத்த வாரமே நான் கன்னியாகுமரிக்குச் சென்றேன். அம்மா வைக் கண்டு தொழுதேன். அதன் பிறகு ஆண்டு தோறும் சென்று கொண்டிருக்கிறேன் என்று கூறினர் திரு. இராஜமாணிக்கம்.

இப்போது அம்மா இருக்கும் ஓலைக்குடில் திரு. இராஜமாணிக்கம் அவர்களின் பெரு முயற்சியால் தான் கட்டப்பட்டது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அம்மா பகல் நேரத்தில் கடற்கரையிலேயே இருப்பார். இருட்டியதும் கோவிலின் கிழக்கு முகப்பில் உள்ள சிறு வாயிலின் முன் மண்டபத் தின் ஒட்டுத் திண்ணையில் படுத்துக் கொள்வார்; அல்லது கோவிலின் முன் முகப்புப் பகுதியில் படுத்துக் கொள்வார்.

மழைச் சமயமாய் இருந்தால் பகலில் கூட அம்மா வின் புகலிடம் அதுதான்.

ஒரு முறை கோவிலில் மராமத்து வேலை நடந்த போது, தேவசத்திற்கு உரிமையான இடத்தில் கூலி

வேலை செய்கின்றவர்கள் சிறிய ஓலைக் கூரை ஒன்றை வேய்ந்திருந்தனர்.

கோவிலின் வேலை முடிந்த பிற்பாடும் அந்த ஓலைக் குடில் பிரிக்கப்படாமலேயே இருந்தது.

அம்மா தம் வாழ்விடத்தைக் கிழக்கு மண்டபத்திலிருந்து ஓலைக் குடிலுக்கு மாற்றிக் கொண்டார். தேவசத்தார் அம்மா அதில் நிரந்தரமாக இருந்துவிட்டால் அது தனியார் சொத்தாகி விடும் என்று எண்ணி ஓலைக் கூரையைப் பிரித்து விட்டனர்.

அம்மாவின் நிலை பழையபடி ஆனது. முகப்புத் திண்ணை வாழ்விடமானது.

1975-ல் திரு. இராஜமாணிக்கம் தேவசம் எல்லையிலேயே தன் செலவில் ஓலைக் கூரை ஒன்றைக் கட்டிக் கொடுத்தார். அதில் அம்மா கொஞ்சநாள் இருந்தார். தேவசத்தார் அதையும் பிரித்து விட்டனர்.

அப்போது தேவசம் போர்டில் தி. மு. கழக அங்கத்தினர்கள் இருந்தனர். அந்தக் கூரை பிரிக்கப்பட்ட மறுவாரம் போர்டு கலைந்தது.

அம்மா பழைய படி ஒட்டுத் திண்ணையை நாடிச் சென்றார்; மாயி பக்தர்களுக்கு அது பொறுக்கவில்லை. எப்படியாவது நிரந்தரமான ஒரு இடத்தை அம்மாவிற்குக் கொடுக்க வேண்டுமே என்று முயற்சி செய்தார்கள். திரு. இராஜமாணிக்கம் அதில் தீவிரமாய் இருந்தார்.

ஒரு முறை அவர் கன்னியாகுமரிக்கு வந்திருந்த போது தேவசம் போர்டு உயர் அதிகாரி திரு. பால சுப்பிரமணியம் I. A. S. வந்திருந்தார். திரு. இராஜ மாணிக்கம் அவரைக் கண்டு தன் வேண்டுகோளைச் சொன்னர். அந்த அதிகாரி "ஆகா அம்மாவை எனக்குத் தெரியும். ஞான ஆனந்த சுவாமிகள் சொல்லி இருக்

கிருர்களே. இப்போதே வேண்டிய உதவியைச் செய்கி றேன்" என்ருர்.

உடனேயே அவர் தேவசம் போர்டு செலவில் சிறிய ஓலைக் குடில் ஒன்றைக் கட்டச்செய்தார். இப்போது அம்மா இருக்கும் ஓலைக் குடிலின் வரலாறு இது. இந்தச் செய்தி யைத் திரு. இராஜமாணிக்கமே என்னிடம் கூறினர்.

பதிஞென்று

அன்ருடம் குப்பைகளை எரிப்பதை ஒரு கடமையாகச் செய்கிருர் அம்மா. விடாத மழையிருந்தால் மட்டும் அச் செயல் தடைப்படும்.

தென்னடெங்கும் புயல் வீசப் போகிறது; கடல் கொந்தளிக்கப் போகிறது என்ற அச்சம் பரவியிருந்த காலத்தில், அம்மா தாம் எப்போதும் இருக்கின்ற இடத்தி லேயே இருந்தார்; தன் கடமையை ஒழுங்காகச் செய்தார்.

அம்மா இப்படி குப்பைகளை எரிப்பதன் காரணத்தை அவரது சீடர்கள் இப்படிக் கூறுகின்றனர்.

"அம்மா நடத்துவது வேள்வி. அவ் வேள்வியில் மடிவன பல. அவர் இந்த நாட்டு மக்களுக்காக இந்த வேள்வியைச் செய்கின்ருர். எரியும் பொருட்களில் கடைசிப் பகுதிகூட எரிந்த பிறகுதான் அம்மா அந்த இடத்தைவிட்டு அகன்று போவார். காரணம் வேள்வியில் குறைபாடு வந்து விடக்கூடாதே என்றுதான்.

எரிந்த சாம்பலைக் கரைப்பது உலக மக்களின் பாவத் தைக் கரைப்பது போல. சாம்பலைக் கரைப்பது எப்போ தும் நடக்காது.

வேள்வி நடந்த இடத்தைக் கடல் நீரால் சுத்தப் படுத்துவதும் உண்டு.

இதனால் நம் பாவங்கள் கரைகின்றன.

துணியைக் கடலில் முக்கிப் பிழிந்து கசக்கிக் கல்லில் அடித்து இப்படி மாற்றி மாற்றி சலிப்பின்றி அம்மா செய்யும் செயல் கூட மனித மனங்களைப் பக்குவப் படுத்தி அதன் அழுக்கைப் போக்கிச் சுத்தமாகக் கழுவி இந்த உலகில் நடமாட விடுவதற்குத் தகுதியானதாக்கும் செயலின் பிரதிபிம்பமே.

அம்மா பிச்சைக்காரி கோலத்தில் இருக்கிறாளே; அவர் எதைக் கொடுத்தாலும் நாய்களுக்குக் கொடுக்கிறாரே; நாய்களுக்குக் கொடுத்த கையோடு நமக்கும் தருகிறாரே என்ற மனநிலை உடையவர்கள் அம்மாவின் உள்ளொளியைத் தரிசிக்க முடியாது.

அவர் கோவிலுக்குப் போகமாட்டார். அவரே கோவில் தானே. கோவில் கோவிலுக்குப் போகலாமா?

பக்திப் பரவசமெடுக்கும் இச்சொற்கள் சீடர்களுடையவை.

பன்னிரண்டு

நாகர்கோவிலில் இருந்து கன்னியாகுமரிக்குச்செல்லும் சாலையை ஒட்டி பொத்தையடி என்ற கிராமம் இருக்கிறது. மருந்துவாழ் மலையின் அடிவாரத்தில் அமைந்த அக்கிராமத்தில் சாலையோரக் குடிசை ஒன்றில் "நைனார் சுவாமி" என்ற யோகி இருக்கிறார்.

அவர் அந்த ஊருக்கு வந்து 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. 12 ஆண்டுகளாக மலையடிவாரத்திலேயே இருந்தவர் கடந்த ஓராண்டு காலமாக ஒரு குடிசையில் இருக்கிறார்.

யாரிடமும் அவர் நேரடியாகப் பேசுவதில்லை. கேட்கும் கேள்வியைப் புரிந்து கொண்டு பதில் கூறவில்லை

எதிரே மனித உருவம் இருக்கிறது; அவர்கள் நம்மிடம் பேசுகின்றார்கள்; பதிலுக்குக் காத்திருக்கின்றார்கள் என்ற ஸ்மரணை இல்லாமலே பேசுகிறார்.

அவர் தனக்குத் தானே இடைவிடாது வேகமாகப் பேசிக் கொண்டே இருக்கிறார். அவர் பேசும் மொழி இதுதான் என்று உறுதியாகக் கூற முடியாதபடி இருக்கிறது அவரது பேச்சு.

அவரது பேச்சில் தெலுங்கு கன்னட ஹிந்தி தமிழ் மொழிச் சொற்கள் கலந்து வருகின்றன. ஆனால் அம் மொழிச் சொற்களை அவர் ஒலிக்கின்ற முறையில் கூட ஒரு வேகத்தை, மற்றவர்களிடமிருந்து மாறுபட்ட தன்மையைக்-காணலாம்.

நான் பேராசிரியர் சஞ்சீவியுடன் நைனார் சுவாமியைப் பார்க்கச் சென்றிருந்த போது அவர் தனியாகத்தான் இருந்தார். சிறிய ஓலைக் குடில்; கீழே மண் தரை; அருகில் பீடித் துண்டுகள். அவர் தனியாகப் பேசிக் கொண்டிருந்தார். இரண்டு புதிய மனிதர்கள் தம் முன்னே அமர்ந்திருக்கின்றார்கள் என்ற ஸ்மரணை இல்லாமலே பேசிக் கொண்டிருந்தார்.

பேராசிரியர், அவர் பேசிய பேச்சுக்களைப் பற்றிக் குறிப்பிடும் போது "இவர் பேசும் சொற்கள் பொருளுடையவைதான். ஆனால் தொடர்ச்சியின்றி இருக்கின்றன. எப்போதோ நினைவில் உள்ள சொற்கள் இவரது முயற்சியின்றி வெளிப்படுகின்றன; அதனால் அவற்றில் கோர்வையில்லை; நம்மால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை" என்றார்.

நான் அவரோடு இருந்த நாட்களில் அவரிடம் தொடர்ந்து இருந்த செயல் நாடி சுத்தி செய்வது

தான். ஒரு மணிக்கூரில் ஏறத்தாள 20 முறைகளுக்கு மேல் செய்கிறார். அது 1 அல்லது 2 நிமிட நேரம் தான். நாடி சுத்தி செய்யும் போது 'வீராசனம்' செய்யும் நிலையில் அமர்ந்திருக்கிறார்.

பேசும் போது சீசீ சே சே சீசீ சே சே என்பது அவர் அடிக்கடி பயன்படுத்தும் சொற்கள்.

பீடி குடிக்கிறார்; அதை ஒரே இழுப்பாக இழுத்து உறிஞ்சிப் புகையை விடுகிறார்.

அவர் பேசுகின்ற சொற்கள், மோன நிலை, எல்லாமே அவரது இந்த ஜென்மத்தின் பழைய செய்கைகளின் எச்சமாகக் காட்சியளிக்கின்றன.

சித்த புருஷர்களில் அவர் ஒரு வகை. அவர் நூலறுந்த பட்டம் போல் இருக்கிறார். எப்போதும் சீசீ என்ன உலகம் இது, சே சே என்ன உலகம்; இது வேண்டாம் எதுவுமே வேண்டாம் குடும்பம் வேண்டாம் என்று வெறுத்ததும் பின் மோன நிலையில் இருந்து ஆனந்தப் பெருவெள்ளத்தை அடைந்ததும் ஆகிய எல்லாம் இன்று அவருக்குக் கனவாகி விட்டன. அவர் மாங்காய் பாலுண்டு மலை மேவிருக்கும் நிலையையும் கடந்தவர் போல் காட்சி அளிக்கிறார். அக் கனவின் எச்சம் வெளிப்படும் போது அவரது செய்கை குழந்தைத் தனமாக, இருக்கிறது. அவதூதர்களின் இலக்கணத்தைக் கூறும் தத்துவ நூற்களின் கருத்து அவருக்குப் பொருத்தமாக இருக்கிறது.

அவர் நூலறுந்த பட்டமாக வாழ்கிறார். ஆஞல் பட்டம் கீழே வந்து சில சமயம் புரிந்து கொள்ளும் நிகழ்ச்சிகளும் உண்டு. மோனத்தவத்தின் பலனை, சித்த புருஷர்களின் குணம் எப்படி என்பதை அப்போது நாமும் புரிந்து கொள்கின்றோம்.

அவர் இருக்கும் வீட்டின் உரிமையாளரான வைத்தி

யர் இறந்த செய்தியைக் கேட்டு அவர் புகைப்படத்தைப் பார்த்து அழுதாராம். கட்டுப் படுத்த முடியாத அளவுக்கு அழுது தீர்த்தாராம்.

இராமாயணம் என்ற சொல்லைக் கேட்டால் சூர்ப்பனகை என்றும், கன்னியாகுமரி என்றதும் வாரணாசி என்றும் தொடர்ச்சி இல்லாமல் ஆனால் பொருள் தொடர் பாய் பேசுகிறார்.

சில சமயம் பாடுகிறார், அதுவும் ஒன்று அல்லது இரண்டு நிமிட நேரம் தான். ஒரு காலத்தில் இனிமை யாகப் பாடியவர் என்பதற்கு அதுவே சான்று. பாடிய பாட்டையே நிறுத்தி நிறுத்திப் பேசுவார்.

"ஏடு கொண்டல வாசா வெங்கடேசா ஆடதி ஆடதி கூசு கூசு பங்காரு கொண்டா" என்று பாடுவார்.

அடிக்கடி பாட்டின் முடிவின் போது 'தெற்கே போ' எனத் தமிழிலும் கூறுகிறார். அதற்கு "அவர் மாயம்மா விடம் போகச் சொல்வதையே அப்படிக் கூறுகின்றார்" என்று அவரோடு நெருங்கியவர்கள் கூறுகின்றார்கள்.

மண்ணை உருட்டி உருண்டையாக வைத்துக் கொண்டு உலகம் உலகம் என்பார்.

அடிக்கடி கோபப்படுகிறார். அருகில் இருப்பவர் அஞ் சும் படியாக ஏசுவார். எழுந்து அடிக்க வருவார்.

அவர் குளித்துப் பதிமூன்று ஆண்டுகள் ஆகின்றன. இந்தச் செய்தியை அவருக்கு உணவு கொடுத்துப் பாராட் டுகின்றவரே கூறினார். ஆனால் அவர் அருகில் நெருங்கி இருந்தால் குளிக்காததற்கு எந்த அடையாளமும் இல்லா திருப்பதைக் காணலாம்.

திரு. இராஜமாணிக்கம் இந்த யோகிக்கு மாதம் நூறு ரூபாய் அனுப்புகிறார். அந்தப் பணத்தில் அவருக்கு உணவு கொடுக்கின்றனர் அந்த வீட்டைச் சார்ந்தவர்கள்.

சாப்பாடு கூட கொடுத்தால் மட்டும் தான். இல்லை யென்றால் அப்படியே இருக்கிறார்.

இந்த யோகியையும் அம்மாவையும் சந்திக்க வைக்க வேண்டும் என்று சிலர் விரும்பினர்கள்.

நைனார் சுவாமியை வாடகைக் காரில் ஏற்றி அழைத் துக் கொண்டு அம்மாவிடம் சென்றனர்.

அம்மாவும் நைனார் சுவாமியும் சந்தித்து எதுவும் பேச வில்லை. கோவில் பிரசாதத்தை மட்டும் தங்களுக்குள் பரிமாறிக் கொண்டார்கள்.

நைனார் சுவாமி அங்கு இருக்க விருப்பம் இன்றி எழுந்தார். கட்டாயமாகப் புறப்பட்டார். அவரை மறுபடி யும் அவர் இடத்துக்கே அழைத்துச் சென்றார்கள்.

அம்மாவை நைனார் சுவாமி இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அப்போதும் இருவரும் பேச வில்லை. அம்மாவின் மடியில் சுவாமி தலையை வைத்தார். அம்மா அவருக்கு ஆசீர்வாதம் செய்வது போல் தலையைத் தடவினர்.

அவர்களது சந்திப்பில் வேறு எதுவும் நிகழவில்லை. அம்மா நைனார் சுவாமியின் அருகில் அதிக நேரம் இருக் கப் பிரியமின்றி கன்னியாகுமரிக்கு வந்து விட்டார்.

திருவண்ணாமலை கோவிலின் அடிவார மேடையில் 'யோகிராம் சூரத்' என்ற யோகி இருக்கிறார். அவரிடம் அம்மாவை அழைத்துச் சென்றார் திரு. இராசமாணிக்கம்.

கன்னியாகுமரியில் இருந்து வாடகைக் காரில் தான் சென்றார்கள்.

அம்மாவைக் கண்டதும் யோகிராம் சூரத் "காம் ஜல்தி கரோ" என்றாராம். அம்மா ஒன்றும் பேசவில்லையாம்.

கொஞ்ச நேரம் இருவரும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அம்மாவைத் திருவண்ணுமலைக் கோவிலின் உள்ளே அழைத்துச் செல்ல முயற்சி செய்தார் திரு. இராஜ மாணிக்கம். ஆனால் அம்மாவிற்குக் கோவிலினுள் செல் வதற்கு விருப்பம் இல்லை. பாதியிலேயே கட்டாயமாகத் திரும்பி விட்டாராம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கன்னியாகுமரிக்குத் திகம்பரச் சன்யாசிகள் வந்திருந்தனர். அவர்கள் ஜைன சமயத்தைச் சார்ந்தவர்கள்.

ஏற்கனவே அம்மாவைப் பற்றி அவர்கள் கேள்விப் பட்டிருந்தனர். உதவியாளர்களின் துணையோடு அம்மா இருந்த கடற்கரைப் பகுதிக்குச் சென்றனர். அம்மா எது வும் பேசவில்லை. கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

வேடிக்கை பார்க்க வந்த கூட்டம் சுற்றிலும் நின்று கொண்டிருந்தது. திகம்பரர்களின் பார்வை அம்மாவின் ஆன்மாவைப் புரிந்து கொண்டது போல் இருந்தது. அவருக்குத் தான் ஜாதி மதம் மொழி எதுவுமே கிடை யாதே. அவற்றில் பற்றுக் கொண்ட நிலைக்கெல்லாம் எத்தனையோ மைல் தாண்டியவராயிற்றே.

அன்று இரவு அந்தச் சமணத் துறவிகள் கன்னியா குமரியிலேயே தங்கி இருந்தனர்.

மறுநாள் காலையில் அம்மா இருந்த குடிலுக்கு அவர் கள் வந்தார்கள். குடில் திறக்கவில்லை. அவர்கள் காத் திருந்தார்கள். குடிலினுள் ராஜேந்திரனும் அம்மாவும் நாய்களும் மட்டும் தான் இருந்தனர்.

திகம்பரர் வெளியே காத்திருப்பதை உணர்ந்த இராஜேந்திரன் குடிலின் கதவைத் திறக்க முயற்சி செய்தார்.

அம்மா எழுந்து வந்து தடுத்தாராம்; இராஜேந்திர னைக் கதவைத் திறக்க விடவில்லை.

திகம்பரர்கள் கொஞ்ச நேரம் காத்திருந்து விட்டுச் சென்று விட்டார்களாம். அவர்கள் சென்ற பின்புதான் குடிலைத் திறக்க இராஜேந்திரனுக்கு அனுமதி கொடுத்தாராம் அம்மா.

இந்த நிகழ்ச்சியை திரு. இராஜேந்திரனே என்னிடம் சொன்னார்.

பதிமூன்று

மாயம்மாவின் தோற்றம் பற்றிய கருத்துக்கள் பல வேறு இருக்கின்றன. அவற்றுள் திரு. சிவசுப்பிரமணிய பிள்ளை கூறுவது புதுமையானது.

எண்பது வயதைக் கடந்த திரு. சிவசுப்பிரமணிய பிள்ளை சிறந்த பக்தர்; ஒரு காலத்தில் வலிமை வாய்ந்த உடலுடன் விளங்கிய குஸ்தி பயில்வான். சர்வோதயத் தொண்டர். ஆன்மீகத் தொண்டர்களை நாடி அவர்களோடு சல்லாபித்திருப்பதில் மகிழ்ச்சி அடைபவர்.

அத்தகைய மனிதர் மாயம்மாவின் பக்தர். அவர் அம்மாவின் பூர்வ ஜென்ம நிலைபற்றிக் கொடுத்த குறிப்பு மாயம்மா சமாஜத்தின் பதிவு ஏட்டில் இருக்கிறது.

திரு. சிவசுப்பிரமணிய பிள்ளை சுசீந்திரம் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சமயம் நடந்த நிகழ்ச்சி அது. சுசீந்திரத்தில் இப்போது 'மலையாம் பள்ளிக்கூடம்' இருக்கின்ற பகுதியில் ஒரு பெண் அமர்ந்திருப்பதைப் பல முறை பார்த்திருக்கிறார்.

அவரும் அவருடைய நண்பர்களும் பள்ளிக்கூடம் விட்டுச் செல்லும் போது அந்தப் பெண்ணைப் பார்த்து அவரது நண்பர்கள் பரிகாசம் செய்வார்களாம்.

அவளது பைத்தியக்காரத் தனம் சிறுவர்களது குறும்புத் தனத்துக்குக் காரணமாக இருந்தது.

ஒரு நாள் குறும்புக்காரச் சிறுவன் ஒருவன் அந்தப் பெண்ணை நோக்கிக் கல்லை எறிந்தான். தொடர்ந்து சிற்கள் அவளை நோக்கிச் சென்றன.

ஆனால் என்ன ஆச்சரிசம்; ஒரு கல் கூட அவள் மேல் விழவில்லை. திரு. சிவ சுப்பிரமணிய பிள்ளை அந்தக் காட்சியை நேரில் கண்ட பிறகு அவளிடம் பக்தியோடு பழகினர். அந்தப் பெண்ணுக்குப் பீடி வாங்கிக் கொடுப்பார். தேயிலையும் பீடியும் தான் அவளுக்குப் பிடித்த மானவை.

அந்தப் பெண் கன்னியாகுமரியில் மாயம்மா இன்று இருக்கும் திருக்கோலத்துக்கு எந்தவிதத்திலும் மாறுபடாத நிலையில் இருந்தார். அவள் எப்போதும் ஏகாந்தமாகவே இருப்பாளாம்.

அவள் எந்த நேரத்தில் மல ஜலம் கழிப்பாள், எப்போது குளிப்பாள், என்ன செய்கின்றாள் என்று யாருக்கும் தெரியாது.

அவள் யாரையும் அணுகிப் பசி என்று கேட்டதில்லை.

முழங்காலுக்கு மேல் இடுப்புக்குக் கீழ் ஓர் ஆடை மட்டும் அணிந்திருப்பாள். அரைக்கு மேல் துணி அணிந்து கொள்வதில்லை.

அவள் ஒருபக்கம் சாய்ந்து நடப்பாள். அமாவாசை பௌர்ணமி போன்ற நாட்களில் அவள் எங்கே செல்வாள் என்பது யாருக்கும் தெரியாது.

எப்போதாவது பேசுவாள். பேசும் போது ஹிந்தி மொழியின் உச்சரிப்பு தெளிவாக இருக்கும். ஆனால் சொற்கள் தொடர்ச்சியாக பொருள் பொதிந்ததாக இருக்

காது. பிறர் பேசுவதை அது எந்த மொழியாக இருந்தாலும் புரிந்து கொள்ளுவாள். அவளது செய்கை, அதைப் புலப்படுத்தும்.

திரு. சிவ சுப்பிரமணிய பிள்ளைக்கு நாற்பது வயது இருக்கும் போது அந்தப் பெண் சுசீந்திரத்திலிருந்து கொட்டாரத்திற்கு வந்து விட்டாள். (கொட்டாரம், நாகர்கோவில்-கன்னியாகுமரி சாலையில் இருக்கிறது.) கொட்டாரம் பஸ் நிலையத்திலேயே தம் முழு நேரத்தையும் கழித்தாள்.

திரு. சிவ சுப்பிரமணிய பிள்ளையும் கொட்டாரத்தைத் தன் வாழ்விடமாகக் கொண்டிருந்ததால் அந்தப் பெண்ணை அடிக்கடி பார்க்கச் செல்வார். அவள் மழையிலும் வெயிலிலும் துன்புறுவது கண்டு கொட்டாரத்தில் இப்போது போஸ்ட் ஆபீஸ் இருக்கின்ற இடத்தின் அருகில் சிறிய ஓலைக் கூரை போட்டுக் கொடுத்தார். அவள், தம் இறுதிக் காலம் வரை அந்தக் குடிசையிலேயே வாழ்ந்தாள்.

அவளுக்கு ஊரில் சீடர்கள் பெருகினர். திரு. சிவ சுப்பிரமணிய பிள்ளை, திரு. ஆறுமுகம் பிள்ளை ஆகியோர் அவளுக்கு எந்த நேரத்திலும் உதவி செய்யக் காத்திருந்தனர்.

ஒரு நாள் கேரள மாநிலத்தில் உள்ள மாவேலிக் கரையிலிருந்து சாமியார் கூட்டம் ஒன்று வந்தது. அவர்களில் பலர் அப்பெண்ணுக்குக் காணிக்கை செலுத்தினர்.

அக் கூட்டத்திலிருந்த குருசாமிக்கு அவளைத் தெரியும். "அம்மா சுசீந்திரத்திலிருந்து ஏன் இங்கு வந்து விட்டார். என் மனத்தில் தோன்றியதைச் சொல்லுகிறேன். அம்மா வருகிற பௌர்ணமி அன்று சமாதி அடைவார்கள்" என்றார் அவர்.

குருசாமி சென்ற மூன்றாவது நாள் அப்பெண் மெலிந்து காணப்பட்டார். கொட்டாரம் ஊரில் உள்ள அரசாங்க மருத்துவர் அப்பெண்ணைப் பரிசோதனை செய்தார்.

பௌர்ணமி அன்று இரவு ஒன்பது மணி; அவள் நினைவற்று விழுந்தாள். அந்தச் செய்தியைச் சிவசுப்பிர மணிய பிள்ளைக்கு யாரோ சொன்னார்கள். அவர், அவள் இருந்த இடத்துக்கு ஓடிச் சென்றார். அவளது நிலை வெகு மோசமாய் இருப்பதைக் கண்டார். கன்னியாகுமரி யிலிருந்து ஒரு மருத்துவரை அழைத்து வந்தார். மருத் துவர் அவளைப் பரிசோதனை செய்து விட்டு "அம்மா இறந்து நேரம் ஆகிவிட்டதே" என்றார்.

அவள் இறைவனடியில் இணைந்து விட்டாள் என்ற செய்தி பரந்தது. மறுநாள் நாகர்கோவில் போட்டோ கிராபர் செல்லையா வந்தார்; கொட்டாரம் அன்பர்களும் கூடினார்கள்.

அந்த உடலைச் சமாதியில் வைக்கப் போகின்றனர் என்ற செய்தி கேட்டு அக்கம் பக்கத்து ஊரிலுள்ளவர்க ளும் வந்தனர்.

பூம்பல்லக்கில் அவள் உடலை வைத்து பேண்ட் மேளங்கள் முழங்க ஊர்வலமாக ஊருக்கு வெளியே எடுத்துச் சென்றனர். கொட்டாரத்தின் வடக்கே புத்த னாறு கால்வாய்க்குத் தெற்கே உள்ள இடத்தில் அவளைச் சமாதி வைக்க வேண்டும் என்பது ஊர் மக்க ளின் முடிவு.

இடத்தைத் தேர்ந்தெடுத்த அன்பர்கள் சமாதிக் குரிய குழியையும் தோண்டினர்; மற்ற ஏற்பாடுகளையும் செய்தனர்.

பூம்பல்லக்கு சமாதி வைக்க வேண்டிய இடத்துக்குச் சென்றது. குழியின் அருகே சப்பரத்தை இறக்கி வைத் தனர். அந்த நேரத்தில் அங்கு திருவிதாங்கூர் மகா ராஜாவின் அதிகாரி ஒருவர் வந்தார். அரசாங்கத்திற்கு உரிமையான இடத்தில் அரசின் அனுமதியின்றிப் பிணத்தைப் புதைப்பது தவறு என்றார்.

ஊரார் செய்வது அறியாது திகைத்து நின்றனர்.

அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

ஆகாயத்திலிருந்து ஒரு பருந்து கீழே வந்தது; பூம்பல்லக்கை மும்முறை வலம் வந்தது. குழியில் அமர்ந்தது; சிறிது நேரம் இருந்து விட்டு மேலே எழும்பிச் சென்றது.

அதிகாரி திகைத்தார்; அன்பர்கள் ஆரவாரம் செய்தனர். அம்மா அந்த இடத்தில் சமாதி வைக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி நடந்து ஒன்று அல்லது இரண்டு ஆண்டு கழிந்திருக்கும்; கொல்லத்தில் (கேரள மாநிலம்) தாசில் தாராகப் பணியாற்றும் ஓமனக் குஞ்சம்மா என்ற பெண் கொட்டாரத்துக்கு வந்தார். அவள் இறந்த பெண்ணின் பக்தை.

ஓமனக் குஞ்சம்மா ஒரு நாள் கனவு கண்டாள். கனவில் அந்தப் பெண் "எடி ஓமனே! என்னே நினக்கு அறிஞ்னுகூடே; மறந்நு போயோ" என்று கேட்டாள். அதனுலேயே ஓமனக் குஞ்சம்மா கொட்டாரத்துக்கு வந்தாள்.

சமாதி எங்கே? என்று ஊராரைக் கேட்டாள்; அவர்கள் புத்தனுறு பக்கம் வழி காட்டினர்.

சமாதி மழையால் நனையாமலிருக்கக் கீற்றுப் பந்தல் விட்டாள். அன்று சமாதிக்குப் பூஜை செய்தார். கஞ்சி வைத்து ஏழைகளுக்குக் கொடுத்தார்

அதற்குப் பின் அச்சமாதியை யாருமே கவனிக்கவில்லை.

கொட்டாரத்தில் அப்பெண் சமாதியடைந்து நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன.

அவரது ஆன்மா மாயம்மாவின் உடலில்தான் இருக்கிறது.

மாயம்மாவின் நடை உடை பாவனைகள் எல்லாமே முன்பு சமாதியடைந்த பெண்ணின் சாயலாக உள்ளது.

திரு சிவ சுப்பிரமணிய பிள்ளை கூறும் இந்தச் செய்திகள் உண்மையானவை தான்.

சுசீந்திரத்தைச் சார்ந்த ஒருவர், என்னிடம் அந்தப் பெண்ணின் தெய்வத் தன்மையைப்பற்றிக் கூறிய நிகழ்ச்சி இது.

சுசீந்திரம் கோவில் பக்கம் உள்ள தேரை அப்போது பரம்புத் தட்டியால் அடைத்து வைத்திருந்தார்கள். தேரின் மேல் பக்கம் மட்டுமே அடைக்கப்பட்டிருந்தது. கீழ்ப்பக்கம் திறந்த வெளியாய் இருந்தது.

ஒரு நாள் இரவு சுமார் பத்து மணி இருக்கும். மின்சாரம் வராத காலம் அது. பெரிய தேரின் அடியிலிருந்து யாரோ உயிருக்குப் போராடுவது போன்ற குரல் கேட்டது.

தேரின் எதிரே உள்ள சத்திரத்துத் திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் குரல் வந்த திசைக்கு விரைந்து சென்றனர்.

தேரின் அடியில் சக்கரங்களின் இடையில் முப்பது வயதுடைய இளைஞன், மேல் மூச்சு வாங்க களைத்துப் போய் சாய்ந்து கிடந்தான். அவன் தாணுமாலையன் கோவிலில் வேலை செய்கின்றவன்.

அவன் கிடந்த இடத்திற்குக் கொஞ்சம் தள்ளி ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவளுக்கு வயது நாற்பது இருக்கும். நல்ல வாளிப்பான உடம்புடைய அவளது மேல் பகுதியில் ஆடையில்லை. அவள் அமைதியாக இருந்தாள். புதிய மனிதர்களைக் கண்டு அவள் மிரளவில்லை; அஞ்சவில்லை; அவனைப் பற்றிக் குறை கூறவும் இல்லை; வேறு எதுவும் இல்லை.

சென்றவர்களுக்கு அந்த இளைஞனின் கூக்குரலுக்குக் காரணம் புரிந்தது. ஆனால் வாட்ட சாட்டமுடைய அந்த இளைஞன் அஞ்சும் படியாக அவள் என்ன செய்தாள் என்பதுதான் அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. அவனும் அதைப் பற்றிப் பேசவில்லை.

அவளிடம் தெய்வத்தன்மை இருப்பதாக அவர்கள் நம்பினர்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஊரில் உள்ள ஆண்கள் அவளைக் கண்டு கொஞ்சம் ஒதுங்கத்தான் செய்தார்கள்.

இந்த நிகழ்ச்சி நடந்து நாற்பது அல்லது நாற்பத்தைந்து ஆண்டுகள் இருக்கும் அவள் சுசீந்திரத்திலிருந்து எங்கே போனாள் எப்படிப் போனாள் என்பது எனக்குத் தெரியாது என்றார் அந்த முதியவர்.

மேற்கண்ட நிகழ்ச்சியை வேறு இரண்டு பேரும் கூறினர்கள். "அந்தப் பெண்ணின் ஆன்மாவே இப்போது இருக்கும் மாயம்மாவின் உடலில் இருப்பது. அதில் சந்தேகமில்லை" என்றார்கள்.

பதினொன்று

ஆத்ம சாதனைகளின் மூலம் அரும் பெரும் சித்திகளைப் பெற்று அமரநிலை எய்தியவர்கள் சித்தர்கள். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் சித்தர்களை விளக்கும் போது "கடவுளைக் காண முயல்கின்றவர்களைப் பக்தர்கள் என்றும் கண்டு தெளிந்தவர்களைச் சித்தர்கள் என்றும் தேவாரம் பிரித்துக் கூறும். அனுபூதி ஞானம் பெற்றவர்களை Mystics என்ற ஆங்கிலச் சொல் குறிக்கும். சித்தர் என்ற சொல்லும் அப்பொருளில் தமிழில் வழங்கக் காண்கிறோம்". என்பார்.

"சித்தர்கள் உடல் வருத்தி வாடி உயர்நெறி சேர்வர்; ஒளி ஒன்று தோன்றி மறையும். உலகத் துன்பம் பெரி தாய்த் தோன்றும்; ஒளியைப் பிரிந்த நிலை மிகமிக வாட் டும். சித்தர்களது நினைவு வலுப் பெறப் பேரின்பப் பேரொளி விட்டு விட்டன்றி முற்ற முடியத் தொடர்ந்து தோன்றும். அப்பேரின்பத்தின் முடிவாக ஆழ்ந்து ஒன்றி விடுவர்.

சித்தர்கள், வாசி என்ற மூச்சினை அடக்கி ஆண்டு, யோக சக்தியினுல் உடலில் உள்ள மூல ஆதாரம், கொப் புழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலைமுடி என்ற ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலியை எழுப்பிப் பலபல அனுபவமும் வெற்றியும் கண்டு, அப்பால் உள்ள எல்லாம் ஆன பொருளில் நிலைத் துச் சித்தி பெறுகின்றனர்" (சித்தர் பாடல்கள்-அரு. இராமனுதன்).

தமிழ்ச் சித்தர்கள் பதினெட்டு பேர்களின் முழுமை யான, உண்மையான வரலாறு நமக்குத் தெரியாது. அவர்களின் பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன. அவர் கள் வாழ்ந்த கால கட்டத்தில் உள்ளவர்களுக்கு, அம் மகான்களின் வாழ்வை எழுதி வைக்க வேண்டும் என்ற சிந்தனையும் இருக்கவில்லை. சித்தர் பாடல்களில் பல நமக்குப் புரியாமலிருப்பதன் காரணம் அதுதான்.

மாங்காய் பால் உண்டு மலை மேல் இருப்பார்க்கு
தேங்காய்ப்பால் ஏதுக்கடி – குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி.

வேகம் அடக்கி விளங்கு மெய் ஞானிக்கு
யோகம் தான் ஏதுக்கடி - குதம்பாய்
யோகம் தான் ஏதுக்கடி.

நித்திரை கெட்டு நினைவோடு இருப்போர்க்கு
முத்திரை ஏதுக்கடி - குதம்பாய்
முத்திரை ஏதுக்கடி.

இந்தப் பாடல்களின் பொருளை ஒருவாறு விளங்க முடியும். ஆனால் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால் அம்மாவைப் புரிய வேண்டும். அவர் அனுபவ பூர்வமாக புரிய வைப்பார்.

அம்மாவைப் போன்ற சித்த புருஷர்கள் தமிழ்க் கிராமங்களில் காடுகளில் மலைகளில் வாழ்கின்றார்கள்.

சித்தர்களின் வாழ்வை - பாடல்கள் பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்கும் மாணவனுக்குக் கள ஆய்வு (field work) தேவை என்றால், அந்த ஆய்வை மாயம்மாவின் பாதங்களிலிருந்தே தொடங்க வேண்டும்.

அம்மா சித்த புருஷியாக எங்கோ மலையில், ஆளரவம் இல்லாத வனந்தரத்தில் வாழ்ந்திருக்க முடியும். ஆனால் தம் தவம், சக்தி எல்லாவற்றையும் மனம் வருந்தி வந்தவர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே மனிதரோடு மனிதராய் நிலத்தின் எல்லையில் வாழ்கிறார்.

அவரிடம் வருகின்றவர்களின் தன்மையைச் சொல்லி முடியாது. தண்ணீரில் அமர்ந்திருக்கும் வல்லமை பெற்றவர் வருகிறார்; நெருப்பைத் தன் மீது கொட்டி விட்டு எந்த மாற்றமுமின்றி நடப்பவர் வருகின்றார்; தேங்காய் களைத் தன் தலையிலேயே அடித்து உடைத்துக் காட்டுபவர் வருகின்றார்; மண்ணை உருட்டி விழுங்குபவர் வருகின்றார்; முள் ஆணி மீது மணிக்கணக்காய் நிற்பவர் வருகின்றார். இப்படி எத்தனையோ பேர்கள் அம்மாவின் அருகே வந்து வணங்கி விட்டுச் செல்கின்றார்கள்.

கருமமே கண்ணாகத் தீ மூட்டிக் கொண்டிருக்கும் அம்மாவின் அருகில் செல்வார்கள், ஏழைகள், பணம் வேண்டியவர், மகளுக்குத் திருமணம் ஆகவில்லையே என்று எண்ணி ஏங்கி நிற்பவர், புதிய தொழில் ஆரம்பிக்க ஆசீர்வாதம் வேண்டியவர் இப்படி எத்தனை எத்தனையோ பேர் வருகின்றனர்.

உணவுப்பொருட்களை அம்மாவின் முன்னே கொட்டு கின்றார்கள். அவற்றை அம்மா பிரசாதமாக தங்கள் கை களில் கொடுக்க மாட்டாரா என்று ஏங்குகின்றார்கள். அம்மாவிடம் ஆசீர்வாதம் வாங்க கட்டாயமாகக் காத்திருக் கும் முதியவர்கள்; காலை மட்டும் தொட்டு வணங்கி விட்டு தள்ளி நிற்கும் பெண்கள்; இவர்தான் மாயம்மாவா? இவ் வளவு முதிர்ந்தவரா? என்று ஆச்சரியப்படும் பயணிகள்– இவர்களை நாள் தோறும் காணலாம். நான் அம்மாவோடு இருந்த நாட்களில் இக்காட்சிகளைக் கண்டேன்.

அமைதியாக, நேரம் விட்டு, மூடித் திறக்கும் அம்மா வின் இமைகள்; அதன் உள்ளே ஒளிரும் விழிகள்! அவற் றின் நிர்மலப் பார்வை, நேராக நோக்கி அருள் புரியாத தன்மை ஆகியவைகள் அவருக்கே உரியன.

அவரது அருட்பார்வை ஒருபொழுது கூட பணம் பதவி ஆடை ஆபரணம் என்ற தர தம்மியத்திற்காக மாறியது இல்லை; பாரபட்சம் காட்டியது இல்லை.

நூலறுந்த பட்டமாக இருந்த அம்மாவிடம், நிலத்தில் இறங்கி வந்து அருட்பார்வை பார்க்கும் அம்மாவிடம் தம் ஸ்பரிசத்தால் பிறர் துன்பத்தைப் போக்கும் அம்மாவிடம் எப்போதும் எதிலும் ஏற்ற தாழ்வு இல்லை.

சித்து கைவரப் பெற்ற புருஷர்கள், அந்தஸ்து உள் ளவர்களுக்கு அரசியல்வாதிகளுக்கு அந்தரங்கப் பேட்டி அளித்து அருள் நல்கும் வரலாறு இந்த நூற்றாண்டில் நடந்து கொண்டிருப்பது நமக்குத் தெரியும்.

அம்மா அவருக்காகக் கட்டப்பட்ட அழகியசமாஜத்தை : நாடிப் போகவில்லை. வெட்ட வெளியே பரமென்று இருப் பார்க்குப் பட்டயம் எதற்கு என உணர்ந்தவர் அவர்.

அம்மாவின் வாழ்வு முடிந்ததல்ல; அவரது ஆன்மா ஒரு தொடர்கதை; காலம் தான் அதன் வளர்ச்சியைக் காட்ட முடியும்.

இந்த நூலை முடிக்கும் நேரத்தில் ஒரு நிகழ்ச்சியைச் சொல்லி விடுகிறேன்.

மாயம்மா பற்றிய சிறு குறிப்பு ஒன்றை வெளியிட வேண்டும் என்ற என் ஆசையை நிறைவேற்ற அம்மாவி டம் சென்றேன்.

நேரம் கிடைத்த போது அம்மாவிடமே இருந்தேன். மூன்று மாதங்களில் பல மணி நேரங்கள் அம்மாவிடம் வரும் அன்பர்களின் செய்கைகளைப் பார்த்தேன்.

அம்மாவைத் தெரிந்த அன்பர்கள் பலரிடம் அம்மா வைப் பற்றிக்கேட்டேன். மூன்று மாதங்களாகநான் சேக ரித்த குறிப்புக்கள் முழுமையானது என்ற எண்ணம் எனக்கு வரவில்லை.

அம்மாவை முழுமையாக உணர்ந்து நூலை எழுதுவது என்பது அலை ஓய்ந்து நீராடலாம் என்பது போலத் தான். ஆதலால், கிடைத்ததை வைத்து நூலை எழுது வோம், எழுதுவதற்கு அம்மாவின் ஆசிர்வாதம் கிடைக் கிறதா என்று பார்ப்போம் என எண்ணி அம்மாவிடம் சென்றேன்.

மாலை நான்கு மணியளவில் அம்மாவைக் கண்டேன். அம்மா குப்பைகளைக் குவித்துத் தீ மூட்டிக் கொண்டிருந் தார். இரவு ஏழு மணி வரை தீயின் அருகில் இருந்தார்.

நிலவின் ஒளி பரந்த கடலில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது.

குப்பைகள் சாம்பலானதும் ஓலைக் குடிலுக்குச் சென்றார்; நானும் கூடவே சென்றேன்.

குடிசையில் ஒரு 'மண்ணெண்ணை விளக்கு' தொங்கிக் கொண்டிருந்தது. அம்மா மரக்கட்டிலின் மீது அமர்ந்திருந் தார். இராஜேந்திரன் அம்மாவின் கையில் பீடியைப் பற்ற

வைத்துக் கொடுத்தார். அம்மா அதை இரண்டு மூன்று முறை உறிஞ்சி விட்டு அவரிடம் கொடுத்தார்.

என் அருகே பாபஞசம் மில்லில் வேலை செய்யும் இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள், அம்மாவைப் பற்றி பாபஞசம் சித்தர் ஒருவர் கூறியதைச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

மணி 7½ ஆனதும் அவ்விளைஞர்கள் அம்மாவிடம் "போயிட்டு வாரேும்" என்று கூறி பாதங்களைத் தொட்டு வணங்கினர்கள். அம்மா "சரி சரி போயிட்டு வா" என்றார். தமிழில் தான். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "அம்மா ஹிந்தியைத் தவிர வேறு மொழிகளில் பேசியதில்லை" என்று நான் கேட்ட செய்திக்கு அது மாறுபாடாக இருந்தது.

அம்மா முழுமையாகப் புரிய முடியாதவர் என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன்.

நேரம் 8½ ஆனது. நான் சுற்றி இருந்த நண்பர்களிடம் விடை பெற்று விட்டு அம்மாவைப் பார்த்து வணங்கினேன்.

அம்மா என்னைத் தன் அருகில் வருமாறு சைகை செய்தார். நான் அருகில் சென்றேன். தம் வலது கையால் என் தலையைப் பிடித்துக் குனிய வைத்துத் தடவினார். ஹிந்தி உச்சரிப்பில் ஒரு சொல்லை மூன்று முறை சொன்னார். பின் என்னைப் பார்த்து ஏதோ முணுமுணுத்தார்.

நான் அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினேன். அது தான் முதன் முறை. "அம்மா போகட்டுமா" என்று கேட்டேன் "ம் ம்" என்றார்.

எனக்கு அவர் ஆசி கொடுத்தது நூல் எழுதுவதற்கு என்பதை விட மூன்று மாத காலம் பலமுறை அவர்

அருகில் இருந்தும் பலர் வாயால் அவர் பெருமையைக் கூறக் கேட்டும் அதன் பிறகும் அவரை வணங்க வேண்டும் என்ற உணர்வை நான் பெறுததை சுட்டிக் காட்டத்தான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

சுபம்.



ரத்ன அச்சகம், நாகர்கோவில்-1.





மாயி மாண்பு

டாக்டர் ந. சஞ்சீவி M.A., M.Litt,Phd

கடவுளைக் கண்டாலும் கண்டுவிடலாம்; மனிதர் களின்—சாதாரண மனிதர்களின்—மனக் கருத்தைக்கூட சரியாகக் கண்டுக்கொள்ள முடியாது போலிருக்கிறது ! இந்நிலையில் அசாதாரண மனிதர்களின்— சித்தர்களின் மன இயல்பை எவ்வாறு கண்டுகொள்ள இயலும் ? எனவே அறிவியல் உலகில் சில அருட்பொருட்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து—இழைத்து இழைத்து எண்ணி—சில கருத்துக்களை படி நிலையில் படைத்து அவை செப்படிக் கருத்துகளா? அல்லது செம்படிக் கருத்துகளா என்று ஓயாமல் துருவித்துருவி ஆராய வேண்டியுள்ளது. ஆம்! ஓயாமல் ஆய்வதே ஆய்வில் ஒயாமல் இருப்பதே—அறிவு அலையின் நிலையில்லா நிலை!

அண்மையில் தமிழகப் புலவர் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நாகர்கோவில் சென்றிருந்தேன். அதுபோது கன்னியாகுமரிக்குச் சில நேரம் புகளுடன் போய் அங்குள்ள மாயி என்றும் ஜிவன் முக்தர் என்றும் போற்றப்படும் அருளாளரைக் கண்டு கர்க முயன்றேன். அது பற்றிய சில குறிப்புகளைக் கொடுப்பதே இக்கட்டுரை யின் நோக்கம்

நான் சென்ற நாள் அமாவாசை நாளாகவும் மறுநாள் நவராத்திரி நாளாகவும் இருந்தது. வைதிக வழியில் நம்பப்படும் இந்த நாளின் சிறப்பையும் நாளும் நிறைந்தே கன்னியாகுமரிக்குச் சென்றேன். அன்று வெள்ளிக் கிழமையாகவும் இருந்தது. பாமர மக்களிடத்தும் அக் கிழமை பற்றியிருக்கும் பக்தி என் உள்ளத்தில் என்னையும் மீறி பாய்ந்து கொண்டிருந்தது! அண்மைக் காலத்தில்

தத்துவ ஞானி ஜே. கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகளில் யான் மூழ்கி இருந்தாலும் பழமை பாரத்தினின்றும் மெல்ல மெல்லவே விடுதலை பெற வேண்டியுள்ளது!

மாலை ஆறு மணி இருக்கும். பொழுது இருட்டிக் கொண்டிருந்தது. பேருந்திலிருந்து இறங்கியதும் கோவிலுக்குள்ளும் நுழையாமல் வலப் புறமாக மாயி இருக்கும் கடற்கரை குடிசையை நோக்கி கால்கள் விரைந்தன. கொஞ்சதூரம் சென்றதும் 'அம்மாவிற்கு ஏதும் வாங்கிக் கொண்டு போகவில்லையே'! நாய்களுக்குக் கொடுத்து விட்டு நமக்கும் கொடுப்பார்களே!, என்று நினைத்தேன். உடனே வந்த வழியே திரும்பி சில அடிகள் தொலைவிலுள்ள ஒரு சிற்றுண்டிக் கடையில் மூன்று வடைகளை மட்டும் வாங்கிக் கொண்டு வெளியேற முற்பட்டேன். கடைப் படிகளுக்கு முன்பு 'பட்டிகள்'–ஆம் நாஞ்சில் நாட்டு நன்மொழியில் நாய்கள் கூட்டமொன்றைக் கண்டேன். உடனே 'ஓகோ! என்ன இத்தனை நாய்கள் இருக்கின்றனவே! மாயி இங்கு தான் இருக்கிறார்களோ என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். ஆம், 'யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே' என்ற பழமொழியைப் போல் நாய்கள் முன்னே வர நற்றாய் பின்னே வந்து கொண்டிருந்தார்கள். என் வியப்பு விலகும் முன்னே மாயி கடைக்குள் என் விழிகளில் விழி செலுத்தாமலே ஒரு நோக்காய் உள் நுழைந்தார்கள்.

கடைக்குள்ளிருந்த இளைஞர்கள் புதுநகை பூத்தனர்; காய்த்தனர்; கனிந்தனர். 'காசு கொடுக்க வேண்டும்; பில் பில் (Bill)' என்று ஒருவர் மாயியின் மாய மந்திரக் கையைப் பிடித்து இழுத்தனர். இன்னொருவர் அன்னையாரின் நீலக்கம்பளிக் குல்லாவை நீக்கிப் பார்த்தார். மற்றொருவர் 'எனக்கு ஆசி சொல்ல வேண்டும், என்று கூனிக் குறுகி கூசிக் குழைந்து நெளிந்து நடித்தார். எல்லாவற்றையும் கடந்து—எதிலும் கலவாமல் கருமமே கண்ணாக இருந்த கன்னியாகுமரித்தாய்; கிடைத்த பூரி

களையும் தோசைகளையும் கையில் வழிய வழிய வாங்கிக் கொண்டே வெளியில் வந்து நாய்களுக்குப் போட்டார். ஒருமுறை போட்டுவிட்டு மறுமுறையும் அதே கடைக்குள் திரும்பினர். அவர்களைப் பின்பற்றிக் கொண்டிருந்த நான் என் கையிலிருந்த வடைகள் பொட்டலத்தை 'மாயி, என்று சொல்லி கொடுத்தேன். 'யாரது, என்று கேட்டது போல் என்னை உற்றுப் பார்த்துவிட்டுப் பொட்டலத்தில் இருந்ததைக் கூடவந்த தொண்டர் இராசேந்திரன் கையிலும் நாய்களின் வாயிலுமாகப் போட்டார் மாயி.

சில மாதங்கட்கு முன்பு நானும் மனைவியுமாக மாயியைப் பார்த்தோம். அப்போது அவர்களைச் சுற்றி பட்டிகள்தான் இருந்தனவே தவிர மாடு எதுவும் இல்லை. இந்த முறை ஒரு மாடும் அவர்களுடன் வந்துகொண்டிருந்தது! எனவே நாய்களும் மாடும் மாயி கொடுப்பதை மண்டுவதில் போட்டி போட்டுக் கொண்டன. ஆம், மாயியின் சன்னதியில் புத்த ஜாதகக் கதைகளில் புகலப்படுவது போலப் புல்வாயும், புலிவாயும் ஒன்றுபட்டு இருக்கும் அற்புதக் காட்சியைக் காணும்பேறு இந்த கண்களுக்கு எப்போது கிடைக்குமோ?

ஓர் அரைமணி நேரத்தில் நான்கைந்து கடைகளில் ஏறி இறங்கி மாயி உரிமையுடன் மதிப்புடன் உணவுப் பொருட்களை வாங்குவதும் விலங்குயிர்கட்கு வழங்குவதுமாக இருந்தார்கள் கடைகள் சிலவற்றில் தாமே வாழைக் குலைகளிலிருந்து பழங்களைப் பறித்துப் போட்டார்கள். ஒரிரு வெற்றிலைப் பாக்குக் கடைகளில் அதன் உரிமையாளர்களே மாயியைக் கண்டதும் புகையிலைகளைக் கை நிறைய எடுத்துக் கொடுத்தார்கள். அதை மட்டும் அவ்வப்போது மாயி பத்திரமாக வாங்கி உடன் வந்த இராசேந்திரனிடம் கொடுத்து வந்தார்கள். இந்த 'வசூல் 'பயணத்தில்' ஒரு கடையில் ஒரு பையன் பூரிகளை மாயி கையில் கொடுப்பது போல் நான்கைந்து முறை பாசாங்கு செய்ததை மாயி மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டது எனக்கு அச்சம் கலந்த வியப்பைத் தந்தது வியப்பும் பழகிப் போனால் விளையாட்டு ஆகிவிடுமோ?

இறுதியாக மாயி ஒரு சின்னஞ்சிறு பலகாரக் கடையில் போய் உட்கார்ந்தார்கள். நான், பூரியும் டீயும் எனக்கும் மாயிக்கும் இராசேந்திரனுக்கும் கொடுக்குமாறு கடைக்காரனிடம் சொன்னேன். மாயி தானும் சாப்பிட்டார்கள்; முப்பது வயதான இராசேந்திரனுக்கு வாயிலும் ஊட்டினார்கள்; எனக்குக் கையிலும் கொடுத்தார்கள் அப்புறம் வருவோர் போவோரைப் பார்த்துக் கொண்டு அவ்வப்பொழுது ஏதோ வடநாட்டு மொழிச் சொற்களை முணுமுணுத்துக் கொண்டு எவ்வித மெய்பாடுமின்றி மெய்யாகவே உட்காந்திருந்தார்கள். நானும் சிந்தனைக்கடலில் மூழ்கினேன் ஆம், இருட்டி விட்டதால் கன்னியாகுமரியிலுள்ள முக்கடலில் மூழ்க முடியாத நிலையில் கருத்துக் கடலில் மூழ்கி உண்மை முத்துக்கள் ஒன்றிரண்டையேனும் காண—கைப்பற்ற—முயன்றேன். மேலும் மாயி கடலின் அருகில் இருக்கும்போது மற்ற மாயக் கடல் எதற்கு ?

மாயியின் மர்மம் என்ன ? குறைந்தது எண்பது வயது ஆகியிருக்கக் கூடிய—இதை முகத் தோற்றத்தாலேயே காட்டக் கூடிய இந்த அருளாளர் அம்மையார் ஏன் இப்படி இருக்கிறார்கள் ? இவர்கள் பிறந்து வளர்ந்த ஊரோடு இவர்களுக்குத் தொடர்பு அற்றுப்போனது ஏன்? தொடர்புகளைத் துண்டித்த நிலையில் இவர்கள் தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் இரண்டு மூன்று இடங்களில் முப்பது நாற்பது ஆண்டுகட்கு முன்பே இருந்ததாகச் சொல்கிறார்களே! உண்மையா? இவர்கள் வாழ்வின் நோக்கும் போக்கும் இரகசியங்களும் யாவை? இவர் தம் போக்குகளைக் கொண்டு இவர் தம் நோக்கை நோக்க முடியுமா? இளமை முதல்—பதினெட்டு வயது முதல் இவ்வகையில் தீவிரமாக யான் கண்டும் கேட்டும் உணர்ந்திருக்கும் செய்திகள் ஒன்றன் பின் ஒன்றுக ‘நான் பயன்படட்டுமா ? நான் பயன்படட்டுமா ?’ என்று என்னைப் பார்த்து நகைத்துக் கொண்டே நல்வரவு தந்தன. முப்பத்தைந்து ஆண்டுகளாக முற்றிவரும் அறிவுக் கருவி கொண்டு அற்புதங்

களை அளக்க முடியுமா? நாழி கொண்டு ஆழியை அளக்க முடியாது. ஆனால் நம் தலையை மட்டும் கூடவா நினைக்க முடியாது?

எனக்கு விளங்குவது எல்லாம் ஆன்மீக சோதனை கள் செய்கிறவர்கள்—அதற்காகச் சாதனைகள் செய்கிறவர் கள் முதலில் முனைவதெல்லாம் உடலையும் பொருளையும் உலகையும் வெறுத்து ஒதுக்குவதுதான். இதனால்—பல வற்றை ஒதுக்குவதால்—ஒன்றை மட்டும் உறுதியாகக் காண முடியும். இது சாதாரணர் வாழ்க்கையிலும் நமக்கு அனுபவம்தானே! எட்ட உள்ள ஒரு பொருளைக் காண நினைத்தாலோ-ஏன் இதயத்தின் துடிப்பைக்கேட்க நினைத் தாலோ-நாம் கேட்க காண விழையும் பொருட்களைத் தவிர மற்ற பொருள்களை எல்லாம் கவனிக்காமல் புறக்கணித் தலே ஒரே வழியாகின்றது அன்றோ? இந்த அடிப்படை யைப் பின்பற்றித்தான் ஆத்ம சோதனைகள் செய்கிறவர் கள் அனைவரும் கூடிய மட்டும் கும்பல் சேராமல்—குப்பை கள் சேராமல் ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்கள் போலும்!

ஆயினும் ஒன்றிரண்டை மட்டும் பற்றிக் கொண்டிருப் பதற்கு என்ன காரணம்? வேறுபாடற்ற நிலையைக் காண வும் காட்டவும் பார்க்கவும் விலங்குகளிடமும் பேரன்பு செய்கிறார்களோ? தனக்குத் தொண்டு செய்யும் தொண் டரிடமும் தனியன்பு காட்டுகிறார்களோ? கட்டை போல் திட்டையில் கிடக்கும் ஞானிகளைப் பற்றியும் நாம் கேள் விப் பட்டிருக்கிறோம் அவர்களுக்கும் இரமணர்—ஞான நந்தர்—கசவணம்பட்டி சுவாமிகள்—ஒட்டன் சத்திரத்துப் பெரியவர்—பூண்டிமகான்—புரவிப்பாளையம் மாயி போன்ற வர்கட்கும் இடையே எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கக் காரணம் யாது? வேறுபட்ட மணிகளைக் கோக்கும் பொற் சரடு போல் ஓர் ஒருமைப்பாடு ஒளிர்வதும் உண்மை யன்றோ!

கனை அளக்க முடியுமா? நாழி கொண்டு ஆழியை அளக்க முடியாது. ஆனால் நம் தலையை மட்டும் கூடவா நனைக்க முடியாது?

எனக்கு விளங்குவது எல்லாம் ஆன்மீக சோதனைகள் செய்கிறவர்கள்—அதற்காகச் சாதனைகள் செய்கிறவர்கள் முதலில் முனைவதெல்லாம் உடலையும் பொருளையும் உலகையும் வெறுத்து ஒதுக்குவதுதான். இதனால்—பலவற்றை ஒதுக்குவதால்—ஒன்றை மட்டும் உறுதியாகக் காண முடியும். இது சாதாரணர் வாழ்க்கையிலும் நமக்கு அனுபவம்தானே! எட்ட உள்ள ஒரு பொருளைக் காண நினைத்தாலோ—ஏன் இதயத்தின் துடிப்பைக்கேட்க நினைத்தாலோ—நாம் கேட்க காண விழையும் பொருட்களைத் தவிர மற்ற பொருள்களை எல்லாம் கவனிக்காமல் புறக்கணித்தலே ஒரே வழியாகின்றது அன்றே? இந்த அடிப்படையைப் பின்பற்றித்தான் ஆத்ம சோதனைகள் செய்கிறவர்கள் அனைவரும் கூடிய மட்டும் கும்பல் சேராமல்—குப்பைகள் சேராமல் ஒதுங்கித் தள்ளிவிடுகிறார்கள் போலும்!

ஆயினும் ஒன்றிரண்டை மட்டும் பற்றிக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்? வேறுபாடற்ற நிலையைக் காணவும் காட்டவும் பார்க்கவும் விலங்குகளிடமும் பேரன்பு செய்கிறார்களோ? தனக்குத் தொண்டு செய்யும் தொண்டரிடமும் தனியன்பு காட்டுகிறார்களோ? கட்டை போல் நிட்டையில் கிடக்கும் ஞானிகளைப் பற்றியும் நாம் கேள்விப் பட்டிருக்கிறோம் அவர்களுக்கும் இரமணர்—ஞானநந்தர்—கசவணம்பட்டி சுவாமிகள்—ஒட்டன் சத்திரத்துப் பெரியவர்—பூண்டிமகான்—புரவிப்பாளையம் மாயி போன்றவர்கட்கும் இடையே எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கக் காரணம் யாது? வேறுபட்ட மணிகளைக் கோக்கும் பொற்சரடு போல் ஓர் ஒருமைப்பாடு ஒளிர்வதும் உண்மையன்றே!

விளக்கமோ. மாயி தன்னை அவ்வாறே எதிரொலி செய்வது? மாயியிடம் குழந்தை தனியன்பு காட்டியது. அக் குழந்தையின் தாயோ பாதி மாயி போல (!) பரபரப்பின்றி—குமரிக் கடலில் எட்டியிருந்து கதிரவன் தோற்றத்தையும் மறைவையும் காணும் எழில் கலைஞரைப் போல் சுவரில் சாய்ந்து கொண்டார்கள். மாயி மதிமுகத்தைக் கண்டு மலர்ச்சி பெறும் குமுதம் போல் குளிர்த்திருந்தார்கள். அந்தப் பெண் குழந்தையோ வைத்த கண் வாங்காமல் மாயியின் முகத்தை முகந்து கொண்டிருந்தது தன் அன்னையின் இசைவை விழுடியில் பெற்று அவர்கள் வைத்திருந்த லட்டு போன்ற மூன்று உருண்டைகளை எடுத்து மாயியிடம் ஆர்வத்தோடு நீட்டியது,

'ஊகூம் என்று ஒரு விழுடி இசையாமையை வெளிப்படுத்திய மாயி மறு விழுடியே கை நீட்டி குழந்தையிடம் அந்த மூன்று உருண்டைகளை மீண்டும் கேட்டார்கள். அந்தக் குழந்தைக்கு அளவில்லாத மகிழ்ச்சி; அதைக் கண்டு அனைவருக்குமே பெருமகிழ்ச்சி. மாயியோ எந்திரம் போல் அந்த மூன்று உருண்டையினையும் வாங்கி தன் உடன் வந்த தொண்டர் இராசேந்திரனின் ஒரு சிவப்புத் துணியில் முடிந்து வைத்திருந்த முடிச்சுக்குள் நுழைக்க முனைந்தார்கள்—முயன்றார்கள். அதை அவர்கள் செய்யச் சிரமப் படுவதை பார்த்து நானே முன் வந்து அந்தப் பொதிக்குள் அந்தப் பொருள்களை பொதிந்தேன். நான் தான் நட்புக்கு நாரளவு இடம் நாடி அலைந்தேனே! மாயி எதையும்—எவரையும் கண்டு கொளமல் நவராத்திரி பொம்மை போல் உட்கார்ந்திருந்தார்கள்! எனக்கோ நான் செய்த அந்தச் சிறு வேலையை அவர்கள் அனுமதித்ததே பெரிய புண்ணியமாகத் தோன்றியது. மாயி முதலில்மறுத்த மூன்று லட்டுகளை எதற்காக அப்புறம் கேட்டு வாங்கினார்கள்—ஆம். யாருக்காக? எதற்காக?

குடும்பக் கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும் 'போய் வறேன்' என்று சொல்லி, மாயியிடம் விடைபெற்று

கொண்டார்கள். மாயி, அவர்கள் ஒவ்வொருவரையும் அரைப் பார்வையும், முழுப் பார்வையுமாகப் பார்த்து 'போய் வறேன், என்று தானும் எதிரொலிப்பது போல் எதிரொலித்து மெய்ப் பாடின்றி உட்கார்ந்திருந்தார்கள். நானும் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். மனதிற்குள் அப்போது சென்னையில் இருந்த சிறந்த யோகினியாகிய திருமதி ரேவதி அம்மாள் அவர்கள் நினைப்பு மட்டும் அடிக்கடி வந்தது. காரணம், அவர்கள் மாயியைப் பார்க்கும் போது தன் பெயரை உச்சரிக்குமாறு கூறியிருந்தார்கள். அத்துடன் அவர்கள் 'இப்போதெல்லாம் மாயி எப்போதும் பெருநெருப்பு ஒன்றை மூட்டிக் கொண்டே இருக்கிறார்கள்! பார்' என்பார்கள்! நானே மிகவும் பயந்த நிலையில்- உரக்கப் பேசினால் மாயி என்ன நினைப்பார்களோ என்று அஞ்சிய சூழ்நிலையில் மனதிற்குள் மட்டும் ரேவதி அம்மாளை நினைத்துக் கொண்டேன். ஏறத்தாள அரை மணி நேரம் மாயியும் நானும் பக்கத்தில் பக்கத்தில் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தோம். நான் மாயி அவர்களை வைத்த கண் வங்காமல் விழித்துப் பார்த்த வண்ணம் இருந்தேன். மாயியோ குழந்தை போல எதிரே வெறிச்சிட்டுப் பார்த்துக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள். ஓரிரு முறை மட்டும் ஏதோ நினைவு வந்தவர்கள் போல் என்னைப் பார்த்து புன்முறுவல் பூத்தார்கள். அதன் பொருள் ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை. அப்புன்முறுவலைப் பார்த்த எனக்குத் தமிழ் நாட்டில் பல கோட்டைகளிலும், கோவில்களிலும் 'இங்கு புதையல் இருக்கிறதாம்; ஆனால் இன்னும் யாரும் கண்டு பிடிக்கவில்லை' என்று மக்கள் சொல்லும் மரபுச் சொல் தான் நினைவுக்கு வரும்!

அரைமணிநேர அளவு கழித்து திரு. இராசேந்திரன் வந்தார். அதற்குள் அழகான பிராமண இளைஞர்கள் மூவர் அந்தச் சிற்றுண்டி விடுதியில் வந்து சாப்பிட்டனர். அவர்களுள் ஒருவர் உள்ளூர்க்காரர் போலத் தெரிந்தது! எப்படியோ மாயியின் அருமை பெருமைகளை நன்றாக அறிந்

திருந்தவர் போலவும் தெரிந்தது. அவர் தன் நண்பர்களோடும் முதலில் ஏதேதோ அவசர அவசரமான செய்திகளைப் பேசிக் கொண்டிருந்தார். அப்புறம் அவையெல்லாம் தீர்ந்தபின்—அறிவும் மனமும் அமைதியடைந்தபின் அவர் கண்ணும் கருத்தும் மாயியின் மேல்பட்டது! என்ன புண்ணியம் செய்தார்களோ மாயி?! அந்தப் பிராமண இளைஞர் தன் வாயில் தோசையைப் பிட்டுப்பிட்டுப் போட்டுக் கொண்டே மற்ற இரு நண்பர்களிடம் மாயியின் பெருமைகளைக் கண்ணாலும் வாயாலும், கையாலும் தெரிவித்தார். அவர்கள் அதிசயப்பட்டது அவர்கள் முகபாவங்களிலிருந்து தெரிந்தது முக்கியமாக 'மாயியிடம் அற்புத சக்திகள் உண்டு, என்றும் அதற்காகவே எங்கெங்கிருந்தோ பக்தர்கள்' வருகிறார்கள் என்றும் அந்தப் பிராமண இளைஞர்கள் நண்பர்களிடம் சொல்லியது போல எனக்குப்பட்டது. திடீரென்று அவர் தம் இலையில் இருந்த தோசை ஒன்றை எடுத்து மாயியிடம் கொடுக்க முற்பட்டார். அதைப் பார்த்த மாயி 'ஊகும்' என்று தலையை அசைத்து மறுத்து விட்டார்கள். ஆனால் அதை சர்வ சாதாரணமாக (முன் அனுபவத்தால் போலும்!) அந்தப் பிராமண இளைஞர் எடுத்துக் கொண்டார்.

அரைமணி நேரம் கழித்து வந்த திரு. இராசேந்திரன் மாயியிடம் ,சாப்பிடலாமா?, என்று கேட்டார். மாயி தலையை அசைத்தார்கள். அவர் கடைக்காரரிடம் ,என்ன இருக்கிறது?' என்று கேட்டார். ,இப்போது பூரி தான் இருக்கிறது; தோசை தயாராவதற்கு இன்னும் கொஞ்சம் நேரமாகும்,' என்றார் கடைக்காரர். பூரிகள் வந்தன. ஆனால், மாயி ஏனோ அதைத் தொடவில்லை! தோசை வரும்வரை காத்திருந்தார்கள். தோசை வந்ததும் சாப்பிட்டார்கள்; இராசேந்திரனுக்கு வாயில் ஊட்டினார்கள். எனக்குக் கையில் கொடுத்தார்கள். 'கிடைத்தது இலாபம்' என்று நான் அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன்.

நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அந்தப் பலகார கடைக்கு உரிமையாளராகத் தோன்றியவர் தென்

ஞட்டுத் தேவர் திருவுருவினர்—எல்லோருக்கும் வலிய வலிய உற்சாகத்தோடும் பலகாரங்களைச் 'சுடச்சுட சாப்பிடுங்கள்' என்று வியாபாரம் செய்து கொண்டிருந்தார். முதலில் அவர் மாயியைக் கவனிக்கவில்லை.

அப்புறம் கடைசியாக மாயி எழுந்து புறப்பட்டபோது தான் பார்த்தார். அதுவரையில்—மாயிக்குப் பலகாரம் வைத்த போது கூட அவர் மாயியைக் கவனிக்கவில்லை. அவ்வளவு கவனம் அவருக்கு வியாபாரத்தில்! அப்புறமும் கூட மாயி எழுந்த போது அடியேனும் திரு. இராசேந்திரனும் உடன் எழுந்த போதுதான்—அந்தச் சூழல் காரணமாகத் தான் போலும்—அவர் மாயியை உற்றுப் பார்த்தார். 'ஆ! மாயி! என்ற அதிர்ச்சியோடு. எதைப் பற்றியும் எதிர்ப்பாடு (Reaction) செய்யாத நிலையிலிருந்த மாயி, அதை பற்றியும் ஒன்றும் அலட்டிக் கொள்ளாமல் அடி மேலடி வைத்துத் தான் வந்த வழியே திரும்பினர்கள்.

பலகாரக் கடையிலிருந்து இறங்கியதும் நேரேதெரிந்த ஒரு மதிற்சுவர் ஓரமாகப் போய் சிறுநீர் கழித்தார்கள். அப்புறம் கொஞ்ச தூரம் நடந்து சென்று ஒரு குழாயில் சுத்தமாகக் கைகால் கழுவினர்கள். அதற்கப்புறமும் கோயில் வழியாகத் தன் குடிசைக்குச் செல்லும் பாதையில் ஒரு கடையில் தொங்கிக் கொண்டிருந்த வாழைக் குலையில் நான்கைந்து பழங்களைப் பிய்த்து இராசேந்திரனிடம் கொடுத்தார்கள். இன்னும் ஓரிரு ஓட்டல்களில் பலகாரங்களை வாங்கி அங்கே நின்று கொண்டிருந்த மாடுகளுக்கு ஊட்டினர்கள்; நாய்களுக்கும் போட்டார்கள்.

இந்நிகழ்ச்சிகளை யெல்லாம் முடித்துக் கொண்டு மாயி கோயிலுக்குள் நுழையும் நிலையில் கன்னியாகுமரி அம்மனே மாறு வடிவத்தில் வந்தது போல் ஒரு கறுப்பு பிராமண இளைஞர் கோயிலுக்குள்ளிருந்து வெகுவேகமாக வெளியே வந்தார். அவர் மாயியைக் கண்டதும் மிக இயல்பாகத் தலை தாழ்த்தினர். மாயியும் தனது கையை தலைமேல்

வைத்தார். இளைஞர் சரேலெனப் போய் விட்டார். அது ஒரு திருப்பமாக இருந்ததால், என்னால் திரும்பிப் பார்ப்பதற்கும் முடியவில்லை.

மேலும், மாயியின் கூடவந்த இராசேந்திரன், இன்னொரு சித்த வேத நெறியாளர் ஆகியோரோடு ஒட்டிக் கொண்டே மாயியின் குடிசைக்குப் போய்விட யான் விரும்பினேன். முக்கியக் காரணம், அமாவாசை இருட்டு அதற்குள் எங்கும் பரவி அச்சுறுத்திக்கொண்டிருந்தது.

நான் எவ்வளவு விரைவாக நடந்தபோதிலும் மாயியும் அவர்களுடைய அடியார்களும் என்னினும் மிக வேகமாக நடந்து போய்விட்டனர். கன்னியாகுமரி கோயிலின் தென் பிரகாரம்-திருப்பம், தொலை தூரத்தில் உள்ள தன் குடிசைக்கு மாயி மிக நெருங்கிப் போய்விட்டார்கள்-நடந்து நடந்து பழக்கம் போலும்.

ஆனால் அந்த இருட்டில் ஏதாவது குத்தி விடுமோ என்றும் நாய்களே மிதித்து விடுமோ என்றும் அஞ்சி அஞ்சி நான் மெல்ல மெல்ல நடந்த நிலையில் பின்தங்கி விட்டேன். அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சி என் மனமாகிய மலைமீது பொழிந்த "மா மழை" யாக எப்போதும் இருக்கும். அந்த நேரத்தில் அந்த "மழை", "இடியும் மின்னலும்" கலந்து பொழிந்தது. இருட்டில் ஏதோ என் காலில் சட்டுப் பட்டது. நாய் ஒன்றைத் தான் மிதித்து விட்டோமோ என்று உள்ளூர இருந்த பயத்தால் பதறிப் போனேன்.

அப்போது ஒரு குரல் என் நடுக்கத்தைக் கண்டு நகைக்கும் அல்லது இரக்கப்படும் பாங்கில் "என்னப்பா, ரொம்பவும் பயந்துட்டியா?" என்று கேட்டது.

என்னுடைய பயம் இன்னும் அதிகமாகியது. கன்னி முனையில் காற்று வடிவில் உலாவக்கூடிய ஆவியோ?

கள்வனே? கடவுள் தானே? ஒன்றும் புரியாத நிலையில் துணிவை வரவழைத்துக் கொண்டு "எனக்கென்ன பயம். நான் அம்மாவிடத்தில் தானே போகிறேன்? "என்றேன்.

இதற்கு மறுமொழியாக அந்த "மாயக்" (?!) குரல் சொல்லிய சொற்கள் நான் இப்பொழுது நினைத்தாலும் என்னை மருளச்செய்கிறன. அந்தக் குரல் சொல்லியது:

"அங்கே இருப்பதும் இங்கே இருப்பது தானே!" சித்தர் மறை மொழி போலவே இருக்கும் இந்தச்சொற்கள் என்உடம்பில் ஒருமின்சார அலையை பாய்ச்சியது. திரும்பிப் பார்க்காமல் நேரே மேற்கு நோக்கிப் போய் கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் திரும்பி வடக்கு வாசற் படியில் இடப்புறமாக மூடியிருந்த ஒருகடையின் முன் பலகையில் தூங்கியும் தூங்காமலும் படுத்துக் கொண்டே; இரவைப் போக்கினேன்.

என் எதிரே ஒரு மலையாளத்துக்குடும்பம் படுத்துக் கொண்டும், கத்திக்கொண்டும் கிடந்தது அவர்களுக்கு எதிரே ஒரு வடஇந்தியப் பெண்மணி பயபக்தியோடு தியானம் செய்து விட்டுப் படுத்துக் கொண்டார்கள். எப்படியோ இரவுகழிந்தது. தூங்குவதும் விழிப்பதுமாக இருந்த யான் விடியற்காலையில் பேச்சரவம் முதலியன கேட்டு விழித்து எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

எதிரேயிருந்த வடநாட்டுப் பெண்மணி எழுந்து உட்கார்ந்து தியானம் செய்தார்கள்; பின்னர் இருக்கையை விட்டு எழுந்து நான்கு திசைகளையும் பார்த்து வணங்கி விட்டுத் தான் படுத்திருந்த இடத்தையும் தொட்டுத் தொட்டுக் கும்பிட்டார்கள். இது எனக்குப் புதுமையாகவும் புதிராகவும் இருந்தது.

ஓரிரு விநாடிகளில் இது பற்றிய கருத்து ஒன்று என் உள்ளத்தில் ஒளி வீசியது: உறங்கும் போது(ம்) தன்பால் அன்பால் குடியிருந்து காப்பாற்றிய கடவுளைக் கும்பிடும் கொள்கைகுணம்!

விடியற் காலை, கோயிலின் எதிரே உள்ள படியில் உட் கார்ந்து கொண்டிருந்தேன்; அமைதியாக இருந்தேன். என் கண்முன்னே மகாவித்துவான் தண்டபாணி தேசிக ரும் அவரது மருமகர் குருசாமி தேசிகரும் காட்சி அளித்த னர். அவர்களைக் கண்டு நான் வியந்தேன்; என்னைக் கண்டு அவர்களும் வியந்திருக்கக்கூடும். திரு. தண்ட பாணிதேசிகரிடம் யான் மாயியைப் பார்க்க வந்ததைச் சொன்னேன்.

தமக்கும் அந்த அம்மையாரைத் தெரியும் என்றும் பெரியவர்கள் என்றும் திரு. தேசிகர் அவர்கள் சொன்னர் கள். அவர்களுடைய பெருமையை விளக்குவதாக மரு மகர் திரு. குருசாமி ஒற்றைவரிக் கதை சொன்னர்கள். அது வருமாறு.

ஒருமுறைத்தம்மைப் பார்க்க அன்பர் ஒருவருக்கு மாயி இரு சோழிகளை எடுத்து கையில் கொடுக்க அவற்றை வாங்கிக் கொண்டு தம் வீட்டிற்குப் போன அவ்வன்பர் தமக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருப்பதைக் கண்டு வியந்து மகிழ்ந்தார்.'

மாமனரும் மருமகரும் வைத்த தயவால் அடியேன் பல் விளக்கிக் கொண்டு அவர்களோடு கடலாடச் சென்றேன்! வழியில் மாயியைப்பார்க்கலாம் என்று தேசிகர்களும் விரும் பினர்கள். மாயி தம் குடிசையில் கடலை நோக்கிப்படுத்துக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு வணங்கினேம். பின் னர் முக்கடல் நீராடி கதிரவன் முளைக்கும் காட்சியும் கண்டோம்

தேசிகர்கள் தம் ஆத்மார்த்த பூசை செய்ய அறைக்குச் சென்றனர். நானே நம்மாயி எந்தநாளும் உள்ளேபுகுந்து வணங்காத அந்த மகாமாயியை—கன்னியக்குமரியைக் கண் ணளவில் கண்டேன். காட்சியாளர் பட்டியலில் என் பெயரையும் பதிவு செய்து கொள்ள வேண்டுமே என்ற

பயம் காரணமாக, அவசர அவசரமாக அன்னையைத் தொழுது வலம் வந்துவிட்டு நாகர்கோயிலை நோக்கிப் பேருந்தில் பறந்தேன்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடந்து மாதங்கள் ஆறு ஆகிவிட்டன. பிப்ரவரி மாதம் ஏழாம் தேதி 'கன்னியா குமரி இதழ்' ஆசிரியரும் முப்பது ஆண்டுகட்கு மேற்பட்ட நண்பருமாகிய திரு. பி. எஸ். மணி அவர்களின் இளைய மகன் திருமணத்திற்காகச்செல்லும் கடமையுணர்வு எனக்கு நல்ல வேளையாக நல்வினை காரணமாக ஏற்பட்டது! அத்துடன் நெருக்கடிக் காலத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியால் (Stroke) பக்கவாத நோய்க்கு இரையாகி இன்னும்முழுதலம் பெறுமல் இருக்கும் என்மனைவிக்கு நாகர்கோயிலில் உள்ள புகழ்பெற்ற ஆயுர்வேத வைத்தியர் ஒருவரிடம் மருந்து வாங்குவதற்காகவும் நாகர்கோயில் செல்லும் எண்ணம் எழுந்தது. அதன்படியே நாகர்கோவில் சென்ற யான் அங்குள்ள இளந் தலைமுறையின் இளஞாயிறு திரு. அ. காக்கும்பெருமாள் அவர்களையும் புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. சுந்தர இராமசாமி அவர்களையும் சந்தித்துப் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள திட்டமிட்டேன்.

பிப்ரவரி ஆரும் தேதி திரு. சுந்தரராமசாமி அவர்கள் என்னையும் மனைவியையும் காலைச் சிற்றுண்டிக்கு அழைத்துச் சென்றார்கள். அப்புறம் எங்கள்மீது வைத்தப் பேரன்பு காரணமாக நாங்கள் அதுவரைப் பார்க்காமல் இருந்த பத்மநாபபுரம் அரண்மனையைக் காட்டவும் இசைந்து காரில் அழைத்துச் சென்றார்கள்.

வழியெல்லாம் இயற்கை அழகை-அமுதை-வாரி உண்டோம். இரத்தினச் சுருக்கமாக பெட்டகமாக அமைந்திருந்த பத்மநாபபுரம் அரண்மனையில் வாடா விளக்கையும் வண்ண வண்ண ஓவியங்களையும், பத்மநாப சுவாமிகள் யோக நித்திரை அறிதுயில்புரிய கேரளமன்னர் அமைத்திருந்த கட்டிலையும் இரண்டாம் தட்டில் அவர் இன்துயில்

கொள்ள இயற்றியிருந்த அறுபத்து நான்கு மூலிகைப் பலகைகளால் ஆகிய கட்டிலையும், அவரும் அவர் குடும் பத்தினரும் வாழ்ந்த இடங்களையும், நடந்த நடைகளையும் மகிழ்ந்த வாவியையும் கண்குளிரக் கண்டோம்.

இதன்பின் திரு. சுந்தர ராமசுவாமி அவர்கள் எங்களை கன்னியாகுமரி போகும் வழியில் நெடுஞ்சாலை ஓரத்தி லேயே இருக்கும் பொற்றையடிச் சுவாமிகள் என்பவரைக் காண அழைத்துச் சென்றார். இந்தச் சுவாமிகளை இரண் டாம் முறையாக இம்முறைப் பார்த்தேன். வன்சொல்லும் வன்செயல் பாவனையும் நிறைந்த இவரைப் பற்றித் தனிக் கட்டுரையில் தான் எழுதவேண்டும்.

பொற்றயடி சுவாமிகளைப் பார்த்த பின்பு கன்னியா குமரிக்கும் போய் வந்து விடலாமே என்று திரு. சுந்தர ராமசாமி சொன்னபோது முன்தினம் 'இந்தமுறை மாயி யைப் பார்க்க நேரம் கிடைக்காது போல இருக்கிறதே' என்று ஏங்கிய எங்களுக்கு எதிர்பாரா இன்பம் ஏற்பட்டது. திரு. சுந்தர ராமசாமியின் விருந்தோம்பும் மருந்துப்பண் பை வாயார வாழ்த்திக் கொண்டே காரில் ஏறினோம். சில மணித்துளிகளில் கன்னியாகுமரி சேர்ந்தோம்.

சிற்றுண்டிச் சாலையில் மாயிக்குத் தருவதாகப் பலகாரப் பொட்டலங்களை வாங்கிக் கொண்டு மாயியின் குடிசையை நோக்கி வாயு வேகமாக நடந்தோம். அங்கே நாங்கள் கண்டகாட்சி எங்களை ஏதோ ஒரு தனி உலகத்திற்கே இழுத்துச் சென்றது.

சுற்றியிருந்த கடலையும் சுடர் விட்டிருந்த கட்டடங்க ளையும், கோயில்களையும் மணிமண்டபங்களையும் கண்களும் காண மறந்தன. குத்துக்கால் வைத்துக் கொண்டு மாயி உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைச் சுற்றிப் பத்துபேர் சூழ்ந்திருந்தார்கள். எதிரே ஏராளமான விறகுக் கட்டை களைப் போட்டுப் பெருந் தீ மூட்டப் பட்டிருந்தது. ஒரு

பெரிய ஆள் தலையில் முண்டாசைக் கட்டிக்கொண்டு அந்த விறகுக் கட்டைகள் தீயில் எரியும்படி பெரிய தடிக்கொம் பால் புரட்டிப்புரட்டித் தள்ளிக்கொண்டிருந்தார்.

மாயி அந்தத்தீயை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தார். என்னையறியாமலே, இக் காட்சி யைப் பார்க்குமாறு சொல்லியிருந்த சென்னை யோகினி ரேவதிஅம்மாள் நினைவுஎனக்கு வந்தது! அந்தோ! சென்ற முறை மாயியைப் பார்த்தபோது அவர்கள் இருந்தார்கள்! இந்தமுறை —எரியும் தீயைப் பார் என்றார்கள்!

இதற்காகத்தானே? தீயெரியும் காட்சியைச் சாலையிலி ருந்து பார்த்தபோதே திரு. சுந்தர ராமசாமி என் னிட ம் கேட்டார். 'இதன் நோக்கம்என்ன?' எனக்குத் தெரிந்த பதிலை யான் சொன்னேன். 'தன்வினைகளும் உலகத்துத் தீமைகளும் எரிந்து சாம்பலாவதாக மாயி எண்ணுகிறார்கள் போலும்' இந்தக் கருத்து சரியாக இருத்தல் கூடுமோ? என்று எண்ணியவராய் திரு. சுந்தர ராமசாமி மௌனமாக இருந்தார்.

மாயியிடம், வாங்கி வந்தப் பலகாரப் பொட்டலங்களைக் கொடுக்குமாறு என் மனைவியிடம் சொன்னேன். அவர்க ளும் அவ்வாறே செய்ய மாயி அருள்கூர்ந்து தன் மலர்க் கரங்களில் அப்பொட்டலங்களை வாங்கி 'உம், உம்' என்று 'ஊம்' காரம் செய்து தீ மூட்டிக் கொண்டிருந்த பெரிய ஆளிடம் அந்தப் பொட்டலங்களை ஒப்படைத்தார்.

இதைக் கண்டு மகிழ்ச்சியுற்ற நான் எல் லை யில் லா மகிழ்ச்சியையும் எய்தும் பொருட்டு மாயி பற்றிய இக்கட்டு ரையின் முதற்பகுதி மலர்ந்துள்ள 'மூலிகைமணி' இதழை மாயியிடம் காட்ட முனைந்தேன். என் செயலைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த சுந்தர ராமசுவாமி 'என் ன ? என்ன? இதைக் காட்டவா போகிறீர்கள்?' என்று சற்றே அதிர்ச்சியுடன் கேட்டார். அடியேன் 'ஆம்' என்றேன் உறுதியாக. அவர் 'சரி காட்டுங்கள்; அப்புறம் ஒரு செய்தி சொல்கி றேன்' என்றார். நான் எதற்கும் து ணி ந்து

மூலிகைமணி இதழைப் பிரித்து மாயியின் இருபடங்களும இருக்கும் பக்கங்களை மாயியிடம் குழந்தை போல் காட்டினேன். என்ன வியப்பு! எல்லோருக்கும் வியப்பு! மாயி 'மூலிகைமணி' இதழைக் கையிலே வாங்கி முகத்தை அதில் பதித்து படங்களையும் உற்றுப் பார்த்து அமைதியாக 'உம், உம்'என்றார்கள். எனக்கு அந்தக் கண நேரத்தில் வேறெதுவுமே நினைவில்லை; அந்த நிலையே எனக்குப் பேரின்ப பெருநிலையாக இருந்தது.

அப்புறம் சுந்தர ராமசாமி சொன்னார்: 'சில காலத்திற்கு முன்பு மாயி பற்றி புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவர் எழுதிய கட்டுரை ஒன்றை மாயியிடம் காட்டினார்கள். அதை அவர் ஒருமுறை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை! அதனால் தான் இப்போதும் நீங்கள் இந்த இதழைக் கொடுக்க முனைந்த போது தயங்கினேன். ஆனால் மாயி அதை ஊன்றிப் பார்த்தார்களே!' என்றார். நான் நினைத்தேன். வேலூர் மருத்துவர் சித்தவைத்தியச் செம்மல்-கண்ணப்பர் செய்த வேலை என்று! மூலிகை மணி பெற்ற பேறே பேறு-பெரும் பேறு!





ரத்ன அச்சகம், நாகர்கோவில்-1.

“கன்னியா பிரசுராலயம்”

— விலை 5 ரூபாய் —